DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1393 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 16, 2022



## Ontario Modernizing Computer Studies and Tech-Ed Curriculum to Ensure Students Are Prepared for the Jobs of the Future

## ஒன்றாரியோ மாணவர்கள் தமத தொழில் தேடும் காலங்களில் அவர்கள் தகுதி பெற்றவர்களாக இருக்கும் வகையில் தொழில் நுட்ப பாடத் திட்டத்தில் புதிய மாற்றங்களை அறிவித்துள்ள அரசு

ஒன்றாறியோ அரசாங்கமானது நவீனமயமாக்கல் கணினி ஆய்வுகள் மற்றும் தொழில் நுட்பப் பாடத்திட்டம் ஆகியவற்றில் புதிய அம்சங்களை இணைத்து மாணவர்களுக்கு நன்மையை பயக்கவுள்ள எதிர்கால தொழில் தேடும் காலங்களில் அவர்களுக்குத் உதவியாக இருப்பதை உறுதிசெய்யும்வகையில் புதிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

இதன் மூலம் கெட்டித்தனமுள்ள மாணவர்கள் பாடசாலையில் உயர் வகுப்புக்களை நிறைவு செய்த உடனேயே. அவர்கள் அதிக சம்பளம் பெறும் தொழில்களைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து தங்கள் பல்கலைக் கல்வியையும் தொடர வாய்ப்புக்கள் ஏற்படும் என கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அறிவித்துள்ளார். (உள்ளே விபரமான கட்டுரை 4ம் பக்கத்தில்)

## RE/MAX ACE Realty Brokerage Inc, hosted its Annual Sales Awards Ceremony in Scarborough

## RE/MAX ACE Realty Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் விற்பனை விருதுகள் வழங்கும் விழா சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது

ஸ்காபுறோவில் இயங்கிவரும் **RE/MAX ACE Realty Brokerage**. வீடு விற்பனை முகவர் நிறுவனம் தனது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை கடந்த சனிக்கிழமையன்று **Scarborough Convention Centre.** மண்டபத்தில் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்தியது. நிறுவனத்தின் நிர்வாகப் பங்காளர்களான



திருவாளர்கள் **Sri Nadarajasundaram, Ratheesh Paramalingam, Suresh Paramalingam, Vijay Selvanayagam , Selvan Kasipillai,** மற்றும் **Vaheesan Jeyaveerasingam** ஆகியோர் மேற்படி விழா சிறப்பாக நடைபெற இணைந்து தங்களை அர்ப்பணித்து செயற்பட்டிருந்தனர்.
(தொடர்ச்சி பின் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance; First Mortgage; Second Mortgage; Commercial Mortgage; Equity Loan
ACCOUNTING
Personal Income Tax; Corporate Income Tax; HST Returns; Bookkeeping Service; Payroll Service; Audit preparation; Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## Rich Cakes by Araviram

நிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**

**Contact:**
**Raguram - 647 648 1154**

## காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.

**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net

1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

## வேலை வாய்ப்பு

Part-time Cleaning jobs available in Mississauga near Hwy 401 and Winston Churchill.

Weekends after 2pm.

Contact 647-286-2340

## KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து உயர் வேளாளர் குல மகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம். வயது 33. Completed Doctor of Medicine (Caribbean International Medical University) – Awaiting for Residency Assignment
Proposal from Canada, USA, UK & Sri Lanka will be considered.

**தொடர்புகட்கு:** (416) 282-5379
**அல்லது** (416) 953-8297
Email: Kandiah4u@hotmail.com

## Administrative Assistant Needed

A small office in Scarborough is looking for an Administrative Assistant (Part-Time). Applicants with Computer Skills in Accounting and should be able to perform other office duties. Interested Applicants should send their resumes to email address below :

admin@cyecstoronto.ca




Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222


# மரண அறிவித்தல்



மலர்வு: 11 - 12 - 1959

உதிர்வு: 07 - 12 - 2022

**திரு. சசீந்திரன் சங்கரப்பிள்ளை**
**(Retired Branch Manager, CIBC, Oliver, British Columbia)**

யாழ்ப்பாணம். மானிப்பாய் கனகசபை வீதியை பிறப்பிடமாகவும், Oliver, British Columbiaவை வதிவிடமாகக் கொண்டவருமான சசீந்திரன் (சசி) சங்கரப்பிள்ளை அவர்கள் 07-12-2022 அன்று புதன்கிழமை British Columbiaவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் V. சங்கரப்பிள்ளை - தங்கராணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம்-மங்கையற்கரசி தம்பதிகளின் மருமகனும். ராஜலஷ்மியின் அன்புக் கணவரும், அபர்ணா மற்றும் அனுஜன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சாந்தி, சரோஜினி. சிறீதரன் செந்தில்குமார், பாலகுமாரன். ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-12-2022 திங்கட்கிழமையன்று காலை 10.00 மணியளவில் Nunes-Pottinger Funeral Service and Crematorium என்னும் இடத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
ராஜி:- (மனைவி) 1 250 498 0409
சாந்தி:- (சகோதரி) 1 937 435 4643
சரோஜினி:- (சகோதரி) 1 281 450 6221
செந்தில்குமார் (சகோதரர்) 1 416 538 8164
பாலா:- (சகோதரர்) 1 416 907 2703

உதயன் கதிரோட்டம்

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## இலங்கையில் மனித உரிமை தினம் வருடா வருடம் கொண்டாடப்படும் நிலையில். அரச தரப்பால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளும் தொடர்கின்றனவே?

இலங்கையில் மனித உரிமை தினம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டும் அது தொடர்பாக ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கலந்துரையாடப்பட்டாலும் இலங்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் இஸ்லாமியர்கள் என எந்த இனவேறுபாடுகள் இன்றி அரச இயந்திரத்தாலும் அதைப் பாதுகாக்கின்ற பாதுகாப்பு படையினராலும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளும் கொலைகளும் இன அழிப்புக்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன என்பதை பல உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

சில நாட்களுக்குப் பின்னர் கொண்டாடப்பெற்ற சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் எழுபத்தி நான்காவது ஆண்டு நிறைவு – கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி அன்று கொண்டாடப்பட்டுள்ளது. பெரிதாக விளம்பரங்கள் செய்யப்படாமல் நான்கு சுவர்களுக்குள் இந்த கொண்டாட்டம் இடம்பெற்றிருக்கலாம். மனித உரிமை பிரகடனத்தை மதிக்காக இலங்கை அரசு எத்தனையோ ஆண்டுகளாக சிறைகளுக்குள் அடைத்து வைத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளும் இருட்டாகவே உள்ள நான்கு சுவர்களுக்குள் தான் தங்கள் வாழ்வைக் கழித்து வருகின்றார்கள். அவர்களால் எதையுமே கொண்டாட முடியாமல் உள்ளது. இந்த கவலைகளோடு அவர்களின் வாழ்க்கை முடிந்து விடுமா என்ற கேள்விகள் எழுகின்றபோது அவர்கள் மனங்கள் அனுபவிக்கும் வேதனை அளவிற்குள்ள அடங்கி விடாதவை என்பதே உண்மை.

. இந்த கொண்டாட்டம் நடைபெறும் அதேவேளையில், எழுபத்தைந்தாவது (75) ஆண்டின் கொண்டாடத்திற்காக – ஐக்கிய நாடுகள் சபை முதல் நாடுகள் ரீதியாக, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றது. இவைகளில் எந்த கலந்துரையாடல்களும் கொண்டாட்டங்களும் பாதிக்கப்படடவர்களின் இடங்களுக்கு கொண்டு செல்லப்படப்போவதில்லை என்பதே உண்மை.

இவ்வாறிருக்கையில். இலங்கையில் மனித உரிமை தினம் ஒவ்வொரு வருடமும் வந்து செல்கிறது.ஆனால் சர்வதேச மனித உரிமை பிரகடனம் இலங்கையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார் பிரான்ஸ் வாழ் அரசியல் விமர்சகரும் அரசியல் செயற்பாட்டாளருமான ச. வி. கிருபாகரன் அவர்கள். இலங்கையிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றில் அவர் எழுதியுள்ள கருத்துச் செறிவுள்ளதும். மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு கிடைக்கும் "மரியாதைகள்" எவ்வாறு இருக்கின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றது.

2009 மே மாதம் நடைபெற்ற யுத்தத்தின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களுக்காக விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படையில் அரசாங்கம் என்ன செய்துள்ளது? யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் இன்று என்ன நடக்கிறது? தெற்கில் – 1971 மற்றும் 80களின் பிற்பகுதியில் ஜே.வி.பி.யின் எழுச்சியின் போது இடம்பெற்ற காணாமல் போனவர்கள் – ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர உட்பட பலர் தன்னிச்சையாக கொல்லப்பட்டது பற்றி என்ன செய்துள்ளார்கள். இவ்வாறு தமிழ் செயற்பாட்டாளர்களள் பற்றி மட்டுமல்ல பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்கள் பற்றியும் ச. வி. கிருபாகரன் அவர்கள். தொடர்ச்சியான கேள்விகளை எழுப்பி வருகின்றார்.

இலங்கையில் எமது தமிழர்களின் ஆள் கடத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களை ஆய்வு செய்யும் போது, இவை யாவும் இலங்கை அரசினதும் சிங்கள படையினரிதும் தமிழர் விரோத செயற்பாடாகவும் எமது மக்களின் சனத்தொகையைக் குறைக்கும் அரசியல் சூழ்ச்சி அடங்கியநிகழ்ச்சி நிரல் என்பது தெளிவாகிறது. என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த சில மாதங்களாக எமது மக்கள் மீண்டும் ஏமாற்றப்படவுள்ள அத்தியாயங்கள் இன்னொரு தடவையும் எழுதப்படவுள்ளதாக ஆட்சியை தலைமைதாங்கும் ரணிலும் அவரது நீண்ட நாள் நண்பர்களாக விளங்கும் தமிழ்த் தலைவர்களும் காட்சிப் படுத்த முனைகின்றனர். இரணடு தரப்பினருமே கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக எமது மக்களை ஏமாற்றியே வந்துள்ளனர் தங்கள்அரசியல் பதவிகளை தக்கவைத்துக்கொண்டு உல்லாச வாழ்க்கையையும் அரசு வழங்குகின்ற சுகபோகங்களையும் சலகைளையும் எதிர்பார்த்தே இந்த ஏமாற்று வேலைகள் பற்றி மீண்டும் அறிவிப்புகளை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எண்ணில் அடங்காத அளவில் பாதிக்கப்பட்ட எம்மவரின் வேண்டுகோள்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டு மனிதி உரிமைகள் மதிக்கப்படுவதற்கு பதிலாக மிதிக்கப்படுகின்ற நிலையில் உள்ள போது இந்த பேச்சு வார்த்தைகள் அவசியமற்றவை என்பதே தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

எம்மைப்பொறுத்தளவில் தகுந்த ஒரு நேரத்தில் தான் இந்தக் கட்டுரையை ச. வி. கிருபாகரன் அவர்கள் வடித்துள்ளார் என்றே நம்புகின்றோம். இது ஒரு சர்வதேச குற்றவியல் குற்றம். இவற்றின் அடிப்படையில், முதற்கட்டமாக, காவல்துறையும் மற்ற அரசு படைகளும் இடைத்தரகர்களாக தமிழர்களை எந்தவித காரணமுமின்றி அன்றாடம் துன்புறுத்துகின்றனர். அரசின் மறைமுறை உதவியோடு, அரசிற்கு நெருக்கமாகப் பணிபுரியும் நபர்கள், போக்குவரத்தை ஏற்பாடு செய்து, தமிழர்களை நடுக்கடலில் கைவிடுகின்றனர். இவை அனைத்தையும் நன்கு தெரிந்து வைத்துள்ள தமிழர் தலைமைகள் மீண்டும் மீண்டும் பதவித் தாகத்தோடு தவிப்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்

## தலைமன்னார் துறைமுகம் குறித்து இந்தியாவுடன் பேசுமாறு ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்து



தலைமன்னார் துறை முகத்தை தொழில் துறைமுகமாக மாற்றுவதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

இந்தியாவுடன், இதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பதுளைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடிய போது, இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், இது தொடர்பான கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் பதுளை மாவட்டத்தில் இடம்பெற்றது.

அத்துடன், பதுளை மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மினி சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து, இதன்போது கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த நத்தார் ஒன்றுகூடல்

சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த நத்தார் ஒன்று கூடல் 17-12-2022 சனிக்கிழமை **Jasmin Hall 90 Nolan 341 Markham ON L3R 4L9** என்ற முகவரியில் நடைபெறவுள்ளது. அனைத்து சுருவில் மக்களையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# Ontario Modernizing Computer Studies and Tech-Ed Curriculum to Ensure Students Are Prepared for the Jobs of the Future

## ஒன்றாரியோ மாணவர்கள் தமத தொழில் தேடும் காலங்களில் அவர்கள் தகுதி பெற்றவர்களாக இருக்கும் வகையில் தொழில் நுட்ப பாடத் திட்டத்தில் புதிய மாற்றங்களை அறிவித்துள்ள அரசு



ஒன்ராறியோ அரசாங்கமானது நவீனமயமாக்கல் கணினி ஆய்வுகள் மற்றும் தொழில் நுட்பப் பாடத்திட்டம் ஆகியவற்றில் புதிய அம்சங்களை இணைத்து மாணவர்களுக்கு நன்மையை பயக்கவுள்ள எதிர்கால தொழில் தேடும் காலங்களில் அவர்களுக்குத் உதவியாக இருப்பதை உறுதிசெய்யும்வகையில் புதிய மாற்றங்களை அறிவித்துள்ளது.
இதன் மூலம் கெட்டித்தனமுள்ள மாணவர்கள் பாடசாலையில் உயர் வகுப்புக்களை முடித்த கையோட அவர்கள் அதிக சம்பளம் பெறும் தொழில்களைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து தங்கள் பல்கலைக் கல்வியையும் தொடர வாய்ப்புக்கள் ஏற்படும் என கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அறிவித்துள்ளார். மேலும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ள மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் ஆகியவை தற்போது ஒன்றாரியோ மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் மற்றும் பணியாளர்கள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவும் என்று தாம் கருதுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஒன்றாரியோ மாகணத்தில் உள்ள பல்லின ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர்களை நேற்று இணையவழி மூலமான கருத்தரங்கில் சந்தித்து உரையாடிய அமைச்சர் பின்வரும் விடயங்களை அவர்களிடம் தெரிவித்தார். அப்போது அவர் மிகுந்த உற்சாகமாக உரையாடினார் என்பது இங்கு குறிப்பிடத்க்ககது.

தற்போது அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த தொழில் நுட்பக் கல்வி பாடத்திட்டத்தின் பிரகாரம் ஒன்ராறியோ அரசாங்கம், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் **(STEM)** ஆகியவற்றில் உயர்நிலைப் பள்ளிப் படிப்புகளை மேம்படுத்தி
வருகிறது, மாணவர்கள் உலகளாவிய பொருளாதாரம், அறிவியல் மற்றும் முன்னணியில் இருக்கக்கூடிய அதிநவீன டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் நவீன தொழில்நுட்பத் திறன்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்காக திறமையான வர்த்தகம் தொடர்பான கற்றல் உட்பட. நாளைய சமூகத்தின்
தேவைகளையும் உணரச் செய்தல்

கணினி ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்பக் கல்விப் பாடத்திட்டத்தில் இந்த மாற்றங்கள் மாகாணத்தின் பொருளாதாரத் தேவைகளுடன் பாடத்திட்ட மாற்றங்களை சீரமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரிக்கின்றன மற்றும் வேகமாக வளர்ந்து வரும் திறமையான வர்த்தகத்தில் தேவைப்படும் முக்கியமான வாழ்க்கை மற்றும் வேலை திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

“எதிர்கால வேலைகளுக்கு மாணவர்கள்
தயாராக இருப்பதை உறுதி செய்வதற்காக எங்கள் அரசாங்கத்தின் மற்றொரு நடவடிக்கையை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த மாற்றம் மாணவர்களுக்கு தொழில்நுட்பம் தொடர்பான அனுபவத்தை அளிக்கும், நிஜ வாழ்க்கையில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், இளைஞர்களுக்கு விமர்சன ரீதியாக சிந்திக்கவும், தைரியமாக கனவு காணவும், நமது பொருளாதாரத்திற்கு புதிய பாதைகளை வகுக்கும் திறன்களை வழங்குவதில் கவனம் செலுத்தும் கற்றலை மேம்படுத்தும்,” என்றார். ஸ்டீபன் லெச்சே , கல்வி அமைச்சர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் “எங்கள் மாணவர்கள் மிகவும் புதுப்பித்த பாடத்திட்டத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதாகும், இது வாழ்க்கை மற்றும் வேலை திறன்களை பலப்படுத்துகிறது, இது திறமையான
வர்த்தகங்கள் உட்பட தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் வெகுமதியளிக்கும் வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.”
நாளைய வேலைகளுக்கு மாணவர்களை சிறப்பாக தயார்படுத்த இரண்டு புதிய பாடத்திட்ட மாற்றங்கள்:
செப்டம்பர் 2023 இல் செயல்படுத்தப்படும் புதிய தரம் 10 பாடத்திட்டத்துடன் தொடங்கும் புதிய கணினி படிப்பு பாடத்திட்டம்.
புதிய தொழில்நுட்பக் கல்விப் பாடத்திட்டம், திருத்தப்பட்ட கிரேடு 9 மற்றும் கிரேடு 10 பாடத்திட்டங்கள் செப்டம்பர் 2024 இல் வழங்கப்படும்.
டிஜிட்டல் டெக்னாலஜி மற்றும் இன்னோவே'ன்ஸ் இன் தி மாறிங் வேர்ல்ட் பாடத்திட்டமானது, 2008 ஆம் ஆண்டு கடைசியாக புதுப்பிக்கப்பட்ட கம்ப்யூட்டர் படிப்புக்கான தற்போதைய கிரேடு 10 அறிமுகத்தை மாற்றியமைக்கும். அதன் பின்னர், ஸ்மார்ட்போன்கள் மற்றும் அணியக்கூடிய தொழில்நுட்பங்களின் முன்னேற்றம் போன்ற குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை உலகம் வரவேற்றுள்ளது. , இணைக்கப்பட்ட மற்றும் தானியங்கி வாகனங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் எழுச்சி. புதுப்பிக்கப்பட்ட கணினி ஆய்வுகள் பாடத்திட்டமானது, ஒன்டாரியோவை ளுவுநுஆ கல்வியில் முன்னணி அதிகார வரம்பாக நிலைநிறுத்துகிறது மற்றும் மாணவர்களுக்கு கைவினைத் திட்டங்களை உருவாக்குவதற்கும், செயற்கை நுண்ணறிவு, இணைய பாதுகாப்பு மற்றும் பிற வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஆராய்வதற்கும் குறியீட்டு கருத்துக்கள் மற்றும் திறன்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும். பரந்த அளவிலான
துறைகள் மற்றும் தொழில்.

2009 முதல் புதுப்பிக்கப்படாத தொழில்நுட்பக் கல்விப் பாடத்திட்டம், விவசாயம், உற்பத்தி மற்றும் கட்டுமானம் போன்ற துறைகளில் ஆட்டோமே'னில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கும், இது அதிக திறன் வாய்ந்த பணியாளர்களின் தேவையை அதிகரித்துள்ளது. இந்தத் திருத்தங்கள், தகவல்தொடர்புகள், கட்டுமானத் துறையில் எலக்ட்ரீசியன்கள், பிளம்பர்கள் மற்றும் உற்பத்தித் துறையில் அதிக ஊதியம் மற்றும் வெகுமதி அளிக்கும் பணிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்த உதவும்.

“ஒன்டாரியோவின் உலகத்தரம் வாய்ந்த பணியாளர்களை அதிகரிப்பதன் மூலம் எங்கள் அரசாங்கம் தொடர்ந்து புதுமைகளை வளர்த்து வருகிறது” என்று பொருளாதார மேம்பாடு, வேலை உருவாக்கம் மற்றும் வர்த்தக அமைச்சர் விக் ∴ பெடெலி கூறினார். “ஒவ்வொரு ஆண்டும், 65,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் ளுவுநுஆ தொடர்பான திட்டங்களிலிருந்து பட்டம் பெறுகிறார்கள். ளுவுநுஆ மற்றும் திறமையான வர்த்தகம் தொடர்பான படிப்புகளை நவீனமயமாக்குவதன் மூலம், எங்கள் திறமைக் குழு தொடர்ந்து வளர்ந்து வருவதையும், ஒன்டாரியோ வணிகங்கள் தொடர்ந்து புதுமைகளை உருவாக்குவதையும், செழித்து வருவதையும் உறுதிசெய்கிறோம்.

இரட்டைக் கடன் திட்டத்தை விரிவுபடுத்த இரண்டு ஆண்டுகளில் கூ4.8 மில்லியனை முதலீடு செய்வது உட்பட வர்த்தகத்தில் அதிக மாணவர்களை ஈர்க்க உதவும் திறமையான வர்த்தக உத்தியை வலுப்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பிற செயல்களின் அடிப்படையில் இந்தப் பாடத்திட்ட மாற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. “ என்றார் அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்கள்.





# வடமாகாண பாடசாலை மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் வு.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

ஒழுக்கமான சமூகத்தை சீர்குலைக்கும் பண மோகம் கொண்டவர்களின் பலி கடாக்களாக இலங்கை வாழ் மக்கள் ஆகியுள்ளனர்.

30 வருட யுத்தம் காரணமாக பாரிய அழிவுகளை எதிர்கொண்ட வடமாகாணம் மீண்டெழ முயற்சிக்கும் தருவாயில் மற்றுமொரு பெரும் யுத்தத்தை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

பண்பாட்டிலும் கலாசாரத்திலும் அன்று முதல் இன்று வரை சிறந்து விளங்கும் வட பகுதி சமூகத்தை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப்பொருள் கடத்தலின் துரதிர்ஷ்டவசமான இழப்புகளை சமூகம் இன்று எதிர்கொண்டுள்ளது.

வட மாகாணத்தில் ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் கொக்காவில் பகுதியை சேர்ந்த 2 வயது பெண் குழந்தையொன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றது.

வீட்டில் உறவினர்களில் ஒருவர் பயன்படுத்திய ஐஸ் போதைப்பொருளை இந்த குழந்தை தெரியாமல் உட் கொண்டுள்ளது. இதன்போது, சுகவீனமடைந்த 2 வயது பெண் குழந்தை தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறது.

துரதிர்ஷ்டவசமாக பல மரணங்களும் வட மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

அண்மையில் 14 வயதான பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்ததுடன், அவர் அதிக ஹெரோயின் பாவனை காரணமாக உயிரிழந்துள்ளதாக மரண பரிசோதனை அறிக்கையில் உறுதியாகியுள்ளது.

வடமராச்சியில் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த 22 வயதான இரண்டு இளைஞர்களும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருந்தமையும் உறுதியாகியுள்ளது.

போதைப்பொருள் பாவனையின் நேரடி தாக்கத்தினால் கடந்த 6 மாதங்களில் 13 இறப்புகள் பதிவாகி இருப்பதாகவும் அநேகமானவர்கள் 20 தொடக்கம் 30 வயது உடையவர்கள் என்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் வு.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

குறைந்த வயதுடைய சிலர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்தவர்களில் அடங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொற்று நீக்கம் செய்யப்படாத ஊசிகள் மூலம் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களின் உடலில் அதிகப்படியான கிருமிகள் உட் செல்வதால், அவை இரத்தத்தில் சடுதியாக பெருகி, தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பு ஏற்படுவதாக மருத்துவர் வு.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ள 20 வயதுக்கு குறைந்த மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக வந்து செல்வதாக அவர் மேலும் கூறினார்.

மன்னார் மாவட்டத்திலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுகிறது.

போதைப்பொருளுக்கு அடிமையாகி அடையாளம் காணப்பட்ட 16 வயதுக்கும் குறைந்த மாணவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தர்மராஜன் வினோதன் குறிப்பிட்டார்.

கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் வடக்கிற்கு போதைப்பொருள் கடத்தப்படுகிறது.







# மன்னாரிற்கு 3 நாடுகளின் தூதுவர்கள் விஜயம்

மன்னாரிற்கு திங்கட்கிழமை (12) மாலை விஜயம் செய்த வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ருக், இந்தோனேசியா தூதுவர் தேவி குஸ்டினா, தாய்லாந்து தூதுவர் போஜ் ஹறன் போலின் ஆகியோர் தலைமன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

தலைமன்னார் சென்ற குறித்த தூதுவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு சென்று அங்கிருந்து மணல் திட்டுக்களை பார்வையிட சென்றனர்.

கடற்படையின் விசேட படகுகளில் குறித்த தூதுவர்கள் பாதுகாப்பாக தீடைகளை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.



**- மன்னார் நிருபர்**

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# வாழ வழியின்றித் தவிக்கும் எல்லையோர தமிழர்கள்

## (கனடா உதயனின் சிறப்பு தொடர் - பாகம்-02)

- யாழ்ப்பாணம் செய்தியாளர் நடராசா லோகதயாளன்



இலங்கையில் இந்த மாதத்தின் தொடக்கத்திலிருந்தே காலநிலை சீரற்று உள்ளது. அதிகரித்த மழை, கடும் குளிர் ஆகியவற்றுடன் தொடரும் மின் வெட்டுக்கள், மழை காரணமாக ஏற்கெனவே மோசமாக இருந்த சாலைகள் மேலும் மோசமடைந்து மக்களின் அவதிகளை அதிகரித்தன.

தலைநகர் கொழும்பு தொடங்கி வடக்கே யாழ்ப்பாணம் வரை இதன் தாக்கம் இருந்தது. பல மாவட்டங்களில் இந்த அசாதாரணமான சூழல் காரணமாக ஏராளமான கால்நடைகள் உயிரிழந்தன. அப்படியான சூழலில் காஞ்சுரமோட்டை கிராமத்திலுள்ளவர்கள் சிந்திக்க முடியாத அளவிற்கு எப்படி படுமோசமான சூழலில் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்பதை இந்த தொடரின் முதல் பகுதியை வாசித்தவர்களால் ஓரளவிற்கு அறிய முடியும்.

இந்நிலையில் அந்த காட்டின் நடுவே தற்போது நிலவும் குளிரில் வாழ முடியாது தவிக்கும் தமது வீடுகளைச் சீர் செய்து தாருங்கள் என காஞ்சுரமோட்டை கிராம மக்கள் கோரிக்கை என்னிடம் கோரிக்கை வைத்தனர். என்னால் இயன்ற உதவியை செய்ய முயல்கிறேன் என்று கூறுவதைத் தவிர என்னால் இம்மக்களுக்கு என்ன செய்துவிட முடியும்?

கனடா உதயனின் சிறப்புத் தொடர்களுக்காக அவர்களைக் காணச் சென்ற போது அவர்களின் அவல நிலை வேறு எவருக்கும் வரக்கூடாது என்றே தோன்றியது. அங்கு நான் சிந்திய கண்ணீர்த் துளி-களே அதற்கு சாட்சி.

காஞ்சுரமோட்டையில் 41 குடும்பங்கள் 2017 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்டாலும் எந்த அடிப்படை வசதியும் கிடைக்காத காரணத்தினால் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்பு இற்றைவரை 3 குடும்பங்கள் மீண்டும் கடல்வழியே தமிழகத்திற்கே சென்று விட்டனர்.



இந்த கிராமத்தின் மிகவும் உச்சபட்ச வாகனம் என்பது சைக்கிள் மட்டுமே. எப்படியான அவசர நிலை என்றாலும் அவர்களுக்கு சைக்கிளே கதி.

இதனால் ஒரு தாய் தனது க.பொ. த உயர்தரம் கற்கும் மகளை புதுக்குடியிருப்பில் வாழும் தனது சகோதரியின் வீட்டில் விட்டுவிட்டு வீட்டுப் பணிப்பெண்ணாக அரபு நாடு ஒன்றிற்கு தொழில் தேடிச் சென்று விட்டார்.

இங்கு தற்போது வாழும் 17 குடும்பங்களின் 71 அங்கத்தவர்கள் மட்டுமே வாழ்கின்றனர். அவர்களில் ஒருவர் 3 பிள்ளைகளின் தந்தை 35 வயதான சுப்பிரமணியம் தியாகராசா. "நான் 1987 ஆம் ஆண்டு நுவரேலியாவில் பிறந்து 2012 இல் மீண்டும் வவுனியா வந்தேன். 2017ஆம் ஆண்டு காஞ்சிரமோட்டைக்கு வந்தேன். தற்போது எனது தந்தைக்கு 72 வயதாகியுள்ளது. தோட்டச் செய்கை மூலம் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கிறேன். உளுந்தும் மிளகாயும் பயிர் செய்கிறேன். பிறந்து 22 நாட்களேயான கைக்குழந்தையின் பால்மாவிற்கான வருமானமானமே போதாமல் உள்ளது. இந்த ஆண்டு ஒருபோதுமே இல்லாத குளிரில் குழந்தையும் தாயும் பெரும் நெருக்கடியின் மத்தியில் வாழ்கிறார்கள். நான் இரு ஆண்டுகளின் முன்பு ஏற்பட்ட விபத்து ஒன்றினால் தொழிலில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டேன்".

பொதுவாக அந்த கிராமத்தின் நிலைமை இதனைவிட மோசமாகவுள்ளது. வனவிலங்குகளின் அச்சம் காரணமாக பகல் நேரத்தில்கூட சிறிவர்களைத் தனியே வீட்டில் விட்டு எங்குமே செல்ல முடியாது. இதற்காக பெரியவர்களும் வீட்டில் நிற்க வேண்டும் அல்லது இரண்டு மூன்று வீடுகள் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். மக்கள் குடியிருப்பு பகுதியில் மின்ஒளி இருந்தாலும் காஞ்சுரமோட்டை - மருதோடை வீதியில் 5 கி.மீ தூரம் முழுமையான இருளிலேயே காணப்படுகின்றது.

மாலை 6 மணியிக்கு பிறகு அந்த கிராமத்தில் ஊரடங்குச் சட்டம் தானாகவே நடைமுறைக்கு வரும். வீதியில் படையினருக்குப் பதிலாக யானைகள் நடமாட்டம் காணப்படும். இதற்கும் அப்பால் குழு மாடுகளை நாயாலும் விரட்ட முடியவில்லை. குழு மாடுகள் நாயை விரட்டி வரும். தொகையாக வரும் குழு மாடுகள் வயல்களை நாசம் செய்யும் சமயம் யானை வெடியைப் போட்டால் பின்பு யானை வரும்போது வெடி இல்லாத நிலை ஏற்படும்.

சனிக்குமார நிரோசனிக்கு வயது 2.1 கையில் 18 மாத பிள்ளை. ஒருகையில் பிள்ளையும் மறுகையில் தண்ணீர் வாளியுடன் அவர் செல்வதைக் கண்டேன்.

"தற்போது கணவர் தொழிலிற்காக வவுனியா சென்று வரவேண்டியுள்ளது. 18 மாத குழந்தையுடன் எந்தவொரு தேவையானாலும் 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மருதோடைக்கு நடந்தே சென்றுவர வேண்டும். தற்போது 21 வயதானாலும் 14 வயதிற்கு பிறகு பாடசாலையும் செல்ல முடியவில்லை. அதனால் எந்த தொழில் முயற்சியும் கிடையாது".



அரசு கூறிய வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் கூறினார். "2017ல் இந்த காட்டிற்குள் வந்த எமக்கு 2019 ஆம் ஆண்டு அரசு வீட்டுத் திட்டம் ஒன்றை தருவதாக வாக்குறுதி அளித்தமையினால் மகிழ்வுடன் அத்திவாரம் இடப்பட்டது. இன்றுவரை வீடு எழும்பவில்லை. தற்போது சிறு பிள்ளையுடன் இரவில் பாம்பு, பூச்சியை நினைத்தே பாதிநாள் நித்திரை இல்லை. இனியாவது வீடு வருமா என்ற ஏக்கத்திலேயே வாழ்நாள் கழிகின்றது".

நீண்ட காலம் இக்கிராமத்தில் வாழ்ந்து வருபவர் 68 வயதான பண்டாரம் கதிரமலைக்கு 4 பிள்ளைகள்.

"விவசாயத்தை மட்டுமே நம்பி வாழுகின்றோம். நிலம் உண்டு நீர் இல்லை, கால் உண்டு சைக்கிள் இல்லை, மகன் உண்டு கல்வி இல்லை, பிள்ளையை பெற்றேன் ஆனால் இருவர் உயிரோடு இல்லை என்ற அவலத்தில்தான் இன்றும் உயிர் வாழ்கின்றோம் என்பதனைவிட உயிரை கையில் பிடித்து வைத்திருக்கின்றோம்". இடம் பெயர்ந்து சென்ற இவரது மூத்த மகனை 2006 ஆம் ஆண்டு செட்டிக்குளத்தில் வைத்து இராணுவம் வலிந்து பிடித்துச் சென்றது. இன்றுவரை அவரது மகன் குறித்த தகவல் இல்லை.

தற்போது நெருக்கடி காலத்தில் இங்குள்ளவர்கள் காலை உணவு இல்லாது மதியம் சோறு வடித்து இரு நேரமும் அதையே உண்டு சீவிக்கிறனர்.

இந்தப் பகுதி ஒரு வனவிலங்கு சரணாலயம் போன்றுள்ளது. காலையில் சிறுத்தை, இரவில் கரடி மற்றும் யானை மட்டுமல்லாது பாம்பு, தேள் போன்றவையின் அச்சத்தின் மத்தியில் இல்லை அங்கு வாழ்வும் முடியாமல் வேறு இடங்களுக்கு செல்லவும் முடியாமல் அவர்கள் அங்கு தவிக்கின்றனர்.

"அதிகாரிகளிடம் இதனை எடுத்துச் சொன்னால் மாதம் ஒரு யானை வெடி தருவார்கள் எஞ்சிய நாள்களில் நாம்தான் வெடிக்க வேண்டும். நாம் வாழும் பிரதேசத்தின் காரணமாக எமது உறவுகள்கூட எமது அவலத்தை போக்க திரும்பி பார்க்கவில்லை" என்று அவர் மனம் வருந்தினர்.

இவ்வாறு வாழும் மக்களில் இரு குடும்பங்கள் வளர்த்த மாடுகளில் 4 மாடுகள் இந்த மாதம் 9ஆம் திகதி ஏற்பட்ட குளிரில் இறந்தன. மருதோடையில் இருந்து வந்து செல்லும் வாகனம்கூட தற்போதைய மழையில் வீதியில் ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக கிராமத்திற்கு வர முழுமையாக மறுக்கின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் பாடசாலைக்கு பாதணியும் அணிந்து செல்ல முடியாமல் கையில் தூக்கிச் சென்று பாடசாலையில் கால் கழுவிய பின்பு அணியும் அவலமே நிகழ்கின்றது.

அப்படியான அவலத்தின் மத்தியில் வாழும் அவர்களுக்கு சைக்கிளிற்கு கூட வழியில்லை. குளிர் காலத்தில் வைத்திய வசதியும் இல்லை. அசாதாரணமாக காலநிலையிலிருந்து காப்பாற்றிக்கொள்ள எந்த வழியும் அவர்களுக்கு இல்லை. "முதியவர்கள் 8 பேருக்கும் ஓர் போர்வை. அதேபோன்று மாணவர்களிற்கு நுளம்பு வலை போன்றவற்றை வழங்கினால்கூட உணவு இல்லாது போனாலும் ஏதோ படுத்துறங்க முடியும். ஆனால் அரசு தரும் சமுர்த்தியை மட்டுமே நம்பியுள்ளோம்" இது 71 வயது மூதாட்டியின் வேதனை.

தற்போது நாட்டில் நிலவும் குளிரினால் நகரின் மத்தியிலேயே மாலை 7 மணி எனில் மக்கள் வீடுகளிற்குள் முடங்கும் நிலையில் இவர்களின் நிலையை வார்த்தைகளால் எடுத்துக்கூற இயலாது. அவர்கள் செய்த ஒரு பாவம் இந்த நாட்டில் பிறந்தது தான் என்பது போலுள்ளது அவர்களின் வாழ்க்கை.

மருதோடையில் இருந்து காஞ்சுரமோட்டை வரையான வீதியானது நெடுங்கேணி (வவுனியா வடக்கு) பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி. இதனை செப்பனிட அந்த சபையில் நிதியில்லை. 5 கிலோ மீற்றருக்கு கல் அடுக்கி தார் வீதியாக மாற்றி அமைப்பதானால் தற்போதைய சூழலில் 2 கோடி ரூபா இல்லை என்று அரசு கூறுவதால் அடுத்த சில ஆண்டுகளிலும் இப்பாதை சீர் செய்யப்படும் என்ற நம்பிக்கை இல்லை என்றே கிராம மக்கள் வருந்துகின்றனர்.

அதேநேரம் யானைக்கு வேலி அமைக்க வேண்டுமென்றால் அது சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் வரை அமைக்கப்பட வேண்டும். அதற்கான வாய்ப்பு இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு தினமும் யானை விரட்டுவதே பெரும் பணியாக உள்ளது. மழைக்காலத்தில் விறகை எதிர்த்தும் யானைகளை விரட்ட முடியாது. இதனால் அவலம் மட்டுமல்ல அச்சத்துடனான வாழ்வே இக்கிராமத்தின் நிலையாகவுள்ளது.

"முன்னர் எல்லாம் நாள் ஒன்றிற்கு 1,500 ரூபா கூலி வேலைக்குப் போனால் ஒரு நாள் செலவீனத்தை ஓரளவேனும் ஈடு செய்யலாம் இன்றோ ஒரு கிலோ மாவு 300 ரூபா ஒரு அங்கர் 1,260 ரூபா ஒரு றாத்தல் பாண் 200 ரூபா எதனை வாங்க முடியும்"?

குழந்தைகளிற்கோ முதியவர்களிற்கோ எந்த சுகயீனம் என்றாலும் மருத்துவமனைக்கு சென்றால் கடையில் வாங்கவும் என்று துண்டு எழுதி தருகின்றனர். அதனை வாங்க அவர்களிடம் பணம் இல்லை. இங்கு ஏதாவது சாதமான அம்சம் இருக்குமா என்று தீவிராம ஆராய்ந்து தேடினாலும் ஏமாற்றமே மிஞ்சியது. இவர்களின் நிலை அரசிற்கு தெரியாதா அல்லது தெரிந்தும் கண்கட்டி வாய்முடி மௌனமாக இருக்கிறார்களா என்று தெரியாது. செய்திகளை சேகரிக்க அங்கு செல்வதே ஆபத்தான அனுபவமக இருக்கும் போது, அங்கு வாழும் மக்கள் எப்படியான சூழலில் வாழ்கின்றனர் என்பதை அறிய முடிந்தது.



கால் வயிறு கஞ்சிக்கு கூட வழியில்லாமல், ஆபத்துக்களுக்கு இடையே இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்படியொரு கிராமம் இலங்கையில் உள்ளது ஆட்சியாளர்களுக்கு தெரியுமா?

கனடிய செய்திகள்
Canadian News

# உறையவைக்கும் கடும் குளிரை விரட்டியடித்து வெற்றி விழாவாக நடந்தேறிய காரை வசந்தம் – 2022




கனடா - காரை கலாசார மன்றம் வழங்கி வருகின்ற காரை வசந்தம் கலை விழாவானது இம்முறை 21வது ஆண்டாக சென்ற 10-12-2022 சனிக் கிழமை தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தது.

அன்றைய தினம் கடும் குளிர் நிலிவியபோதிலும் காரைநகர் மக்களின் வருகையினால் அரங்கம் நிரம்பி வழிந்தது. கலை மாணவர்களதும் மூத்த கலைஞர்களினதும் பல்சுவைக் கலை நிகழ்வுகள் சபையோரைக் கவர்ந்து பாராட்டைப்பெற்றிருந்தன. மன்றத்தின் தலைவரான திரு. சிவசம்பு சிவநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் பிரதம விருந்தினராக காரை மண் தந்த கலைஞரான "ஒருத்தி" திரைப்படத்தை இயக்கி சாதனை படைத்த P. S.சுதாகரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

# பளை மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் "முத்தமிழ் அறிஞர்" அ.பொ செல்லையாவின் உருவச்சிலை கல்லூரி வளாகத்தில் திறந்துவைக்கப்பெற்றது

இலங்கை செய்திகள்
Sri Lanka News



பளை மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் "முத்தமிழ் அறிஞர்" அ. பொ செல்லையாவின் உருவச்சிலை திரைநீக்கமும், நூல் வெளியீடும் பாடசாலை அதிபர் உதயகுமார் தலைமையில் 09-12-2022 அன்று பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

பாடசாலை பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட உருவச்சிலையை தொழிலதிபர் வேலணை நா.வீரசிங்கம் திறந்து வைத்தார். கனடாவிலிருந்து திருமதி. யோகரத்தினம் செல்லையா, அவரது புதல்வர் "தமிழன் வழிகாட்டி" செந்தி ஆகியோர் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.



THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS




Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எங்கள் உரிமையே எங்கள் சுதந்திரம் – மன்னாரில் மனித உரிமைகள் தினத்தையொட்டி இடம் பெற்ற விழிப்புணர்வு ஊர்தி பவனி




சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சனிக்கிழமை (10) மதியம் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வாகன ஊர்தி பவனிகள் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளை சுற்றி துண்டுப் பிரசுர விநியோகங்கள் உடன் கவனயீர்ப்புப் பேரணி யாக வலம் வந்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வானது சனிக்கிழமை (10) காலை 10 மணியளவில் மன்னார் வலயக்கல்வி பணிமனை முன்பு ஆரம்பித்து மன்னார் நகரத்தை சுற்றி, பின் பிரதான வீதியூடாக முருங்கன், நானாட்டான் பஸ்தரிப்பு நிலையங்களை சென்றடைந்து வங்காலை ஊடாக மீண்டும் மன்னாரை வந்தடைந்தது.



இதன்போது "எங்கள் உரிமையே எங்கள் சுதந்திரம்" "பேச்சு சுதந்திரம் கல்விக்கான உரிமை, மற்றும் சமூக பாதுகாப்புக்கான உரிமை" "உலகில் உள்ள யாவருக்கும் உரிமைகள் சமமே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மனித உரிமைகள் தொடர்பாக எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இளைஞர்கள் யுவதிகள் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

- மன்னார் நிருபர்

# மன்னாரை சேர்ந்த ஒருவருக்கு சனிதா சீட்டிழுப்பினூடாக மூன்று கோடி ரூபாய் பரிசு




வடமாகாணம் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி லொத்தர் சபையின் சனிதா ரிக்கற் சீட்டிழுப்பினூடாக 7-12-2022 புதன்கிழமை அன்று சூப்பர் பரிசான மூன்று கோடி இருபத்தாறு லட்சத்து நான்காயிரத்து எழுநூற்று முப்பத்து ஒரு ரூபாய் (3, 26,04,731-00) வெல்லப்பட்டுள்ளது.

இவ் ரிக்கற்றினை அபிவிருத்தி லொத்தர் சபையின் மன்னார் விற்பனை முகவர் திரு. என்.மகேந்திரன் என்பவரால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



- மன்னார் நிருபர்

# மன்னார் மற்றும் அம்பாறை நகர சபைகள் மா நகர சபைகளாக தரமுயர்த்த அங்கீகாரம்




மன்னார் மற்றும் அம்பாறை நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி, மேலதிக நிதியைச் செலவிடாமல் ஒரு சில மாவட்டங்களில் காணப்படும் நகரங்களை மாநகர சபைகளாக தர முயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த ஆகஸ்ட் 8ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அங்கீகாரத்தை கருத்தில் கொண்டு அம்பாறை மற்றும் மன்னார் ஆகிய இரண்டு நகர சபைகளிலும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பணிகளை இலகு படுத்துவதற்காக, குறித்த நகர சபைகளை, மா நகர சபைகளாக தர முயர்த்துவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் யோசனை சமர்ப்பித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மக்கள் ஆதரவு அற்ற ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையானது வரி அதிகரிப்பு, தேசிய வளங்களை விற்றல் என்பதே

## நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கா மரிக்கார் தெரிவிப்பு



"ஜனாதிபதி பதவிக்கு எவ்வித தகுதியும் இல்லாத ரணில் விக்ரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது என்பதை மக்கள் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அவர் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகிறாரே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வு காணவில்லை. அத்துடன். வரி அதிகரிப்பு, தேசிய வளங்களை விற்றல் இதுவே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. என நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், வரி அதிகரிப்பு, தேசிய வளங்களை விற்றல் இதுவே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், எமக்கும் இடையில் தனிப்பட்ட வெறுப்பு ஏதும் கிடையாது, பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கிய ராஜபக்சர்களை தொடர்ந்து பாதுகாப்பதற்காக ரணில் அவர்கள் திடீரென பதவிக்கு வந்தார். அதனைத் தொடர்ந்து அவர் இலங்கை மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, ஜனநாயகத்திற்கு எதிராக செயற்படுகிறார். அத்துடன் மக்கள் விரோத செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக செயற்படுகின்றார்.

இதற்கு பல்வேறு எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம், ஆனால் நல்லாட்சியில் பிரதமர் பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க ஊழல் மோசடியாளர்களுடன் ரகசிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டார்.

இவரது செயற்பாடுகளினால் நாட்டு மக்கள் மைத்திபால ஸ்ரீசேனா தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை வெறுத்தார்கள். இதன் பின்னணியில் தான் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய மற்றும் பொதுஜன பெரமுனவின் பலவீனமான நிர்வாகத்தை நாட்டு மக்கள் இரண்டரை வருட காலத்திற்குள் முடிவுக்கு கொண்டு வந்தார்கள். தற்போது இவர்களின் பிரதிநிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவி வகிக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது என்பதை மக்கள் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். அவர் ஒரு மக்கள் ஆதரவு இல்லாத ஜனாதிபதி.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அவர் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகிறாரே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வு காணவில்லை என குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் நேரடியாக ரணிலுக்கு எதிரான கருத்துக்களை பகிர்ந்த கொண்டுள்ளார்.

இதற்கிடையில் மக்கள் ஆதரவு இல்லாத ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் நேரடிக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கலந்துரையாடல் கொழும்பில் இரகசியமான ஒரு இடத்தில் இடம்பெற்றுள்ளது என அறியப்படுகின்றது.

எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தேசிய பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுக்கும் வழிவகைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டாலும் ரணில் எடுக்கும் முடிவுகள் அனைத்துக்கும் சுமந்திரன் "ஆமாம் சாமி" போடக் கூடியவர் என்பதை அனைவரும் அறிவார்கள்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உத்தேச பேச்சுக்களை ஒட்டிய தமிழர் தரப்பின் ஒன்றுபட்ட கருத்து நிலைப்பாட்டை இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எடுத்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் இதை நாம் நம்பத் தயாரில்லை என முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.



# இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளர் நியமனம்



இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலை முகாமையாளராக முல்லைத்தீவு சாலை முகாமையாளராக கடமையாற்றிய வி.லோலன் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் கடந்த 5 ஆம் திகதி மன்னார் சாலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

மன்னார் சாலையின் முகாமையாளராக கடமையாற்றியவர் வவுனியா சாலை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**றொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

### துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு

## விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் றொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS" V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**


உ

சிவமயம்

## ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

**இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்**

**வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்**

**647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வங்காலை புனித ஆனாள் லிற்றில் பிளவர் பாலர் பாடசாலையின் ஒளிவிழா — 2022 சிறப்பாக இடம்பெற்றது



வங்காலை புனித ஆனாள் லிற்றில் பிளவர் பாலர் பாடசாலையின் 2022 ஆண்டிற்கான ஒளிவிழா மற்றும் சிறார்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வானது புனித ஆனாள் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி.ம.ஜெயபாலன் அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் சிறப்பான முறையில் திங்கட்கிழமை (12) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பெரிய கட்டு புனித. அந்தோனியார் திருத்தல பரிபாலகர் அருட்பணி. அன்ரனிற்றோ அருள்ராஜ் குரூஸ், சிறப்பு விருந்தினராக புனித ஆனாள் ஆலய உதவி பங்குத்தந்தை அருட்பணி. பிரசாந்தன், கௌரவ விருந்தினர்கள் அருட்சகோ. ராத்தி, வைத்திய அதிகாரி உதார டீல்விஸ், சட்டத்தரணி. அ.வில்பரட் அர்யுன் மற்றும் அருட்சகோதரிகள், முன்னாள் கல்வி பணிப்பாளர். ஆபேல் றெவல், உதவி கல்விப்பணிப்பாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள். முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், முன்பள்ளி இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், கிராமத்தின் முதியோர்கள், கிராம மக்கள் கலந்து சிறப்பித்தனர்.






மேலும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த பிரதம விருந்தினர் அருட்பணி. அன்ரனிற்றோ அருள்ராஜ் குரூஸ் தமது சிறப்புரையின் போது நாம் சிறுவர்களிடமிருந்து பல விடயங்களை கற்றுக் கொள்வதோடு அவர்களுடைய எதிர்கால வாழ்விற்கு நாம் அனைவரும் ஒன்றினைந்து பயணிக்க வேண்டும் என்று கூறி இந் ஒளி விழா நிகழ்வின் ஊடாக இயேசுவின் அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ வேண்டும் என்று கூறியதோடு இந்நிகழ்வு சிறப்பான முறையில் நடந்தேறியது.

**- மன்னார் நிருபர்**

# பொருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழுகின்ற பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு புதன்கிழமை (14.12.2022) உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. நாவாந்துறை மற்றும் பழம் வீதி ஆகிய பகுதிகளில் இருந்து இக்குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகள் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகள் வழங்கியிருந்தனர். இந்நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.






# தீர்வுக்குள் புதைந்துள்ள டொலர்!



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் தமிழ்த் தலைமைகளின் எதிர்கால அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும்!

"ஒரு புதிய ஆணையை உடனடியாக வழங்க வேண்டும்... 74 ஆண்டுகால ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் ஆட்சியைநிறுவுவதற்கான போராட்டத்தை நாங்கள் தொடங்குகிறோம்" என்று தென்னிலங்கை தனது அடுத்த கட்ட போராட்டத்தை பிரகடனப்படுத்தி நிற்கின்றது. இது இன்னொரு "அரகலயாக்களின் புரட்சிக்கான" அரைகூவலாக உள்ளது.

எனினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கசிங்க அவர்கள் இந்த அரைகூவலுக்கு மத்தியில்

- அரசாங்கத்தின் வருவாயை அதிகரிப்பது
- 7-8% பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்தல்
- FDI களை $3 பில்லியனுக்கும் அதிகமாக அதிகரிப்பது
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சதவீதத்திற்கும் மேலாக சர்வதேச வர்த்தகத்தில் அதிகரிப்பு செய்தல்
- 2023 முதல் 2032 வரையிலான புதிய ஏற்றுமதியிலிருந்து
- $3 பில்லியன் வருடாந்திர வளர்ச்சியை நோக்கி நகர்தல்
- அடுத்த பத்து ஆண்டுகளில் உயர் திறன்களைக் கொண்ட சர்வதேச அளவில் போட்டித் திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குதல்

என வரவு செலவுத் திட்டத்தின்மூலம் அடைய உள்ள இலக்காக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க நிர்ணயித்துள்ளார்.

ஜனாதிபதியின் பொருளாதார இலக்கு நோக்கிய பயணத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து உறுப்புகளுக்கும் இடையில் ஒரு பொதுவான சமூக உடன்பாடு ஏற்படுத்தப்படாவிட்டால் இந்த லட்சிய இலக்குகளை அடைய முடியுமா என்பது சந்தேகமே. ஏனெனில் மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதியின் அழைப்புக்கு ஒட்டுமொத்த தேசமும் எழுச்சிபெற்று அவரின் பின்னால் அணிவகுத்து நிற்குமா என்பது கேள்விக்குறியே.?

- தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

மேற் கூறிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுடன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கிற்கான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளார். இதற்கு தமிழ்தேசியகூட்டமைப்பிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. பேச்சுவார்த்தை 13ஆம் தகதி ஆரம்பமாகியுள்ளது. இந்த பேச்சுவார்த்தையின்போது கலந்துரையாடலில் கெவிந்து குமாரதுங்க தவிர்ந்த ஏனையோர் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என இணக்கம் தெரிவித்துள்ளனர். அது ஒரு பெரிய விஷயம்என ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

- *35 ஆண்டுகளுக்குப் பிறகும் 13ஐ நடைமுறைப்படுத்த முடியவில்லை.*

*"1987ல் தான் 13வது அரசியலமைப்பு திருத்தம் கையெழுத்தானது. இப்போது 2022ஆம் ஆண்டிலும் 13ஐ அமல்படுத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம். 35 ஆண்டுகளுக்குப் பிறகும் இதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதுதான் இந்த நாட்டின் உண்மை நிலை.*

இதற்கு தீர்வு காண்போம் என்று பொய் கூறினால் இம்முறையும் வடபகுதி இளைஞர்கள் கடந்த காலங்களை போன்று போராட்டத்திற்கு செல்வார்கள். இது ஆயுதப் போராட்டம் அல்ல அமைதிப் போராட்டம். ஆனால் அது வடக்கின் அரசியலை முற்றாக தலைகீழாக மாற்றிவிடும். அப்படி நடந்தால் புதிய குழுவுடன் இந்தப் பிரச்னை குறித்து பேச வேண்டியிருக்கும். அதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களிடம் கண்டிப்பாக பேசித் தீர்க்க வேண்டும்" என்றார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடல்கடந்தகாலத்தைப் போன்று கடினமான முயற்சியாக மாறாமல் இருப்பதற்கு அனைத்து தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்திக்கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதி இந்த மூன்று தசாப்த கால பிரச்சினையில் எந்தளவுக்கு உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதும் முக்கியமான கேள்வியாகும்.

அதேவேளையில் ஜனாதிபதி தங்கியிருப்பது மக்கள் ஆணையில் அன்றி பொதுஜன பெரமுனவின் நாடாளு மன்றத்தின் எண்ணிக்கையின் பலத்தினாலாகும். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானதும் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டதும் மொட்டுவின் பலத்தினாலாகும். இந்தப் பலம் தனக்குக் கை கொடுக்கும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு உண்டு. இதனை வைத்தே அவர் அரசியல் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்.

அதாவது அடுத்த சுதந்திர தினத்திற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறியிருப்பது, வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டதை அரசியல் தீர்விலும் பிரதிபலிக்க முடியும் என்ற நம்பிக்கையிலாகும்.

தற்போதைய நெருக்கடியைக் கையாள்வதற்கு நாட்டை ஒன்றிணைப்பதற்கு அரசியல் தீர்வே அடிப்படையான ஒன்றாகத் தோன்றினால், நாடு ஒன்றுபட்டால் ஒழிய நாட்டுக்கு எதிர்காலமோ விமோசனமோ இருக்காது என்பதை நாடும் மக்களும் மாத்திரமல்லகுறிப்பாக ஒட்டு மொத்த அரசியல்வாதிகளும் உணர்ந்தாக வேண்டும். இல்லையேல் இலங்கைக்கு எதிர்காலமோ மீட்சியோ இருக்காது.

ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி கூற வேண்டும். இனவிவகாரத்தில் தென்னிலங்கை கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவித்தாக வேண்டிய நிலைப்பாட்டில் உள்ளன. ஏதோ ஒருவகையில் அடுத்தடுத்து நாடு தேர்தலை எதிர் நோக்கியுள்ள நிலையில் மாத்திரமல்ல சர்வதேசத்தின் அழுத்தம் இனவிவகாரத்திற்கு தீர்வு கண்டாலே நாட்டைத் தூக்கி நிமிர்த்த முடியும் என்ற நிலை தென்னிலங்கை சக்திகளை இனவிவகாரத் தீர்வு நோக்கிய வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உற்பட தமிழ்த் தலைமைகளும் கட்சிகளும் தடம் மாறாமல் அதேவேளையில் தடுமாறாமலும் இருப்பார்களாயின் ஒன்றில் தமிழர் விவகாரத்தில் தீர்க்கமான முடிவினை எட்டலாம் அல்லது தென்னிலங்கை அரசியல் சக்திகளை தென்னிலங்கை மக்களின் முன்பும் சர்வதேச சமூகத்தின் முன்பும் மீண்டும் ஒரு முறை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடியதாக இருக்கும்.

இலங்கை சமூகத்தின் பிளவுபட்ட தன்மை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணப்பட்டது.

- *1957 இல் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம். அது கிழித்தெறியப்பட்டது.*
- *1965 இல் டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.*
- *1987 இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் ஓரளவு மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டது.*
- *சந்திரிகா குமாரதுங்கவின் 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு வரைவு ரணில் விக்ரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் எரிக்கப்பட்டது.*
- *மகிந்த ராஜபக்சவின் காலத்தில் 2010 ஆம் ஆண்டு சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுமுன் மொழிவுகள் அரசாங்கத்தால் கூட பரிசீலிக்கப்படவில்லை.*
- *2015 ஆம் ஆண்டு சிறீசேனா - விக்கிரமசிங்க அரசாங்கத்தால் பல முன்மொழிவுகள் கொண்டு வரப்பட்டன.*
- *இலங்கை சமூகத்தின் பிளவுபட்ட தன்மை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணப்பட்டது.*

மேற் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் வரலாறு. இவைகளுக்கும் அப்பால் பேச்சுவார்த்தை என காலம் கடத்தப்பட்ட தோல்வி வரலாறுகள் ஏராளம்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன விவகாரத்துக்கான தீர்வுகுறித்த பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளார்.

- மஹிந்த ராஜபக்ஷ - பொதுஜன பெரமுன

போர் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்கு "13 பிளஸ்" தீர்வை வழங்குவதாகக் கூறினார். அதன்பின்னர் தலைவர்கள் செய்ததெல்லாம் 13வது திருத்தம் பற்றி பந்தை கடத்துவதுதான்.

இந்த ஒரு பின்னணியிலும் தற்போதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "13 பிளஸ்" என்றே கூறுகின்றார்.

- சஜித் அணியினரும் பச்சைக் கொடி
- தேசிய விவகாரத்தில் ஜேவிபி

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தாங்களாகவே பிரிவினையை கோரவில்லை என்பது ஜேவிபிக்கு நன்றாகவேத் தெரியும்.

ரோஹன விஜேவீர தோட்டத் தொழிலாளர்கள் மீதான தனது உணர்வுகளில் இனவாதி என்பதும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் மீது அவருக்கு எந்த அனுதாபமும் இல்லை என்பதும், மகிந்த ராஜபக்சவுடன் இனவாதக் கூட்டணியை உருவாக்கிய ஜே.வி.பி தலைமை அல்லது தற்போதைய பெரும்பாலான ஜே.வி.பி தலைவர்களுக்குத் தெரியும்.

- வடக்கு கிழக்கு மாகாண இணைந்த அலகை சோமவன்ச உடைத்தார்.

இவ்வாறு ஜேவிபியின் கடந்த கால வரலாறு தமிழர்களுடன் ஒட்டாத உறவாகவே இருந்து வந்துள்ளது. தற்போதும்கூட ஜேவிபி தமிழர்களுடன் கொள்கையளவில் நெருங்கி வந்ததாக இல்லை.

- மலையக மக்கள் குறித்து ஜேவிபி ஆழமாகப் பேசுகின்றது. ஆனால் மலையக மக்களின் தேசியரீதியிலான வகிபாகம் என்ன என்பதுகுறித்து ஜேவிபி வெளிப்படையாகப் பேச வேண்டும்.
- அதேபோல் இன விவகாரத் தீர்வு குறித்தும் முஸ்லிம் மக்களின் தேசியரீதியிலான வகிபாகம் குறித்தும் பேச வேண்டும்.

இது இலங்கையின் தேசிய அரசியலில் ஜேவிபியின் புதிய பிரவேசத்திற்கு வழிவகுக்கும்.

மொத்தத்தில் இனவிவகாரத்தக்கான தீர்வு என்பது தீர்வின்றி சுவரில் அடித்த பந்தாக மீண்டும் மீண்டும் தமிழ் மக்களின் தலையிலேயே வந்து விழுகின்றது. தென்னிலங்கை அரசியல்வாதிகளின் ஆதரவு எதிர்ப்பு என்பது அவர்களின் கண்ணாமூஞ்சி விளையாட்டே அன்றி வேறொன்றும் இல்லை. ஏனெனில் ஆட்சியில் இருக்கும்போது இன விவகாரத் தீர்வுக்கு ஆதரிப்பதாக பாசாங்கு காட்டுவதும். ஏதிர்கட்சியில் இருப்போர் எதிர்ப்பதும் வழமையான சம்பவங்களாகும். இதுதான் தென்னிலங்கை அரசியலின் வரலாறு. எனவே எவரும் தென்னிலங்கை அரசியலில் புனிதர்கள் அல்ல.

தற்போதும்கூட நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வைக் காண நாட்டின் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்படும் வரையில் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டாது என்ற சூழ்நிலை உருவாகியுள்ள நிலையிலும் தமது எதிர்கால அரசியல் நலன் கருதியுமே இனவிவகாரத்தில் அரசியல் கட்சிகளை இறங்கிவர வைத்துள்ளன.

- ஆற்றைக் கடக்கும்வரை அண்ணன் தம்பி

இந்த மாற்றமும் ஆற்றைக் கடக்கும்வரை அண்ணன் தம்பி ஆற்றைக் கடந்தபின் நீ யாரோ நான் யாரோ என்ற நிலை மீண்டும் உருவாகுவதாக இருக்கக்கூடாது.

தமிழ்த் தலைமைகள் ரணில் - மஹிந்த கூட்டணியின் அரசியல் நலன்களுக்காக பேச்சு வார்த்தை என்ற பெயரில் தமிழ் மக்களை பலிக்கடா ஆக்கிவிடக் கூடாது. தமிழ்த் தலைமைகளின் சமரசம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு சமாதி கட்டுவதாகவும் இருக்கக் கூடாது. ஏதும் நடைபெறின் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த கோபமும். தமிழ்த் தலைமைகள் மீதே திரும்பும்.

ராஜித சேனாரட்ன கூறியதுபோல் அமைதிப் போராட்டம் வேறு எவருக்கு எதிராகவும் அல்ல தமிழ்த் தலைமைகளுக்கு எதிரானதாகவே அமையும். மொத்தத்தில் தமிழர் விவகாரத்தக்கான தீர்வுகுறித்த பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் தமிழ்த் தலைமைகளின் எதிர்கால அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதாக அமையும்.

Email : vathevaraj@gmail.com



# பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இராமநாதன் சகோதரர்களில் இருந்து தொடங்கி சம்பந்தர்கள் வரையிலும் சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் அது. கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இலங்கைத் தீவு சுதந்திரம் அடைய முன்னும் பின்னும் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு நடத்திய பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள், எழுதிய உடன்படிக்கைகள் எதுவுமே வெற்றி பெறவில்லை.

ஆயுதப் போராட்டம் கொழும்பின் மீது நிர்ணயகரமான அழுத்தத்தை பிரயோகித்தது. அதனால் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நிலைத்திருந்த இரண்டு உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. மூன்றாவது தரப்பொன்று தலையிட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.இவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் தமிழ் மக்கள் சிந்திய ரத்தத்தின் விளைவாக எழுதப்பட்ட இரண்டு உடன்படிக்கைகள் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நிலைத்திருந்தன. முதலாவது இந்திய இலங்கை உடன்படிக்கை. அடுத்தது ரணில் பிரபாகரன் உடன்படிக்கை. இது தவிர ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரும் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் எவையும் நீடித்திருக்கவில்லை. அவை சிங்கள தரப்புகளாலேயே கிழித்து எறியப்பட்டன.

ஆயுதப் போராட்டமானது இலங்கைத் தீவின் அரசியல் ராணுவ வலுச்சமநிலையை மாற்றக்கூடிய பலத்தோடு காணப்பட்டது. அவ்வாறு வலுச்சம் நிலை மாறும்போதெல்லாம் சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. அல்லது பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. ஆனால் 2009க்கு பின் அவ்வாறு இலங்கை தீவின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றத்தக்க பலம் அல்லது பேரபலம் தமிழ்த் தரப்பிடம் இல்லை.

முதலாவதாக தமிழ்த் தரப்பு ஒரு திரண்ட சக்தியாக இல்லை. இரண்டாவதாக, தமிழ்த் தரப்பு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தொடர்ச்சியான நிர்ணயகரமான போராட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை. தமிழ்த் தரப்பில் இப்பொழுது தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மொத்தம் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. தலைக் கணக்கின்படி பார்த்தால் அது மிகச் சிறிய தொகை. தமிழ் மக்களின் அரசியல் இப்பொழுது தேர்தல் மைய அரசியலாகத்தான் காணப்படுகிறது. மக்கள் இயக்கம் கிடையாது. இந்நிலையில் பூகோள அரசியலைக் கையாளப் போகின்றோம் புவிசார் அரசியலை கையாள போகின்றோம், என்று தமிழ்க் கட்சிகள் கூறிக் கொள்ளலாம். ஆனால் நடைமுறையில் அவ்வாறு புவிசார் அரசியலையோ அல்லது பூகோள அரசியலையோ கையாளத் தேவையான கட்டமைப்புகள் எவையும் தமிழ் கட்சிகளிடம் இல்லை. அதாவது தொகுத்துக் கூறின் 2009க்கு பின் தமிழ் அரசியல் எனப்படுவது ரியாக்ட்டிவாகத்தான் இருக்கிறதே தவிர புரோஆக்டிவாக இல்லை.

இப்பொழுதும் கூட பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் ரணில் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். அது கூட வெளி நிர்ப்பந்தமே காரணம். பொருளாதார நெருக்கடிக்கான நிதி உதவிகளும் இனப்பிரசினைக்கான தீர்வும் ஒரே பக்கேஜ்ஜுக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துவதாகத் தெரிகிறது. கடைசியாக நடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவும் அதை வலியுறுத்தியது. எனவே இனப் பிரச்சினையை தீர்ப்பது தீர்ப்பது போல ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு வெளித்தரப்புகளிடமிருந்து வரும் நிர்பந்தங்கள் காரணமாக அவர் பேச வந்திருக்கிறார். இந்த நிர்பந்தங்கள் காரணமாக தமிழ்த் தரப்பின் பேரம் ஒப்பீட்டளவில் அதிகரித்து இருக்கிறதுதான். ஆனாலும் தனது கோரிக்கைகளை முன் நிபந்தனைகளாக வைத்து பேச்சுவார்த்தைகளை தொடங்கும் அளவுக்கு தமிழ்த் தரப்பு பலமாக இருக்கிறதா என்ற கேள்விக்கு விடை இங்கு முக்கியம்.

ஆயுதப் போராட்டத்தின் பேரபலம் காரணமாகத்தான் வெளித்தலையீடுகள் ஏற்பட்டன. மூன்றாவது தரப்புகளின் மேற்பார்வையின் கீழ் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதலாவது வெளிநாட்டு பேச்சுவார்த்தை திம்புவில் இடம்பெற்றது. அங்கிருந்து தொடங்கி ஒஸ்லோ வரையிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. வெளிநாடுகளில் நிகழ்ந்த எல்லா பேச்சுவார்த்தைகளுக்கும் காரணம் ஆயுத போராட்டந்தான்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலில் வெளியரங்கில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் என்று பார்த்தால் *2015 ஆட்சி மாற்றத்திற்காக நிகழ்ந்த சில ரகசிய சந்திப்புகளைத்தான் குறிப்பிடலாம்.* மற்றும்படி ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின் பேச்சுவார்த்தைகளை கொழும்புக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தரை கிட்டத்தட்ட 17 தடவைகள் ஏமாற்றினார் என்று சம்பந்தரே கூறுகிறார். அதன் பின் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய யாப்புருவாக்கக் குழு 82 தடவைகள் சந்தித்தது. எல்லாவற்றையும் முடிவில் மைத்திரி குழப்பினார். நிலைமாறுகால நீதியின் கீழ் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயன்ற ரணிலின் முயற்சிகளை மைத்திரி முறியடித்தார். அம்முயற்சிகளுக்கு ஐநா பின்பலமாக இருந்தது. ஐநாவின் 30/1 தீர்மானம் அதற்குரிய அடிப்படைகளை வகுத்துக் கொடுத்தது.

ஆனாலும் ஐநா இலங்கைத்தீவில் சம்பந்தப்பட்ட தரப்புகளின்மீது அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு அவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆணையும் இருக்கவில்லை. அதனால்தான் 2018ல் ஒக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூறலுக்கான உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக முறித்தார். அதன்பின் ஆட்சிக்கு வந்த கோட்டாபய மேற்படி பொறுப்புக் கூறலுக்கான ஐநா தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகியது. அதாவது ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஒப்புக்கொன்ற கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்கியது. அனைத்துலக அரங்கில் தானும் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்ட பொறுப்புகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியும் என்பதற்கு அது ஆகப்பிந்திய உதாரணம் ஆகும்.

ஏற்கனவே இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட 13 வது திருத்தத்தை எந்த ஒரு ஜனாதிபதியும் முழுமையாக அமல்படுத்தவில்லை. மாறாக 13 வது திருத்தத்தின் உள்ளடக்கத்தை படிப்படியாக உருவி எடுத்து விட்டார்கள். இப்பொழுது அது ஒரு கோறை. தான் பெற்ற பிள்ளையாகிய 13 வது திருத்தத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றாக வெட்டப்பட்ட பொழுது அதன் பெற்றோரில் ஒருவராகிய இந்தியா அதைப் பார்த்துக் கொண்டிருந்தது. 2009க்கு பின்னரும் கடந்த 13 ஆண்டுகளாக இந்தியா அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

எனவே கொழும்புடனான பேச்சுவார்த்தைகள் என்ற நூற்றாண்டு கால தோல்விகரமான அனுபவத்தின் பின்னணியில், குறிப்பாக 87 ஆம் ஆண்டுக்கு பின்னரான கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலான அனுபவங்களைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ் மக்களுக்கு மிக கசப்பான பாடங்கள் கிடைக்கின்றனபிராந்திய மட்டத்திலும் அனைத்துலக மட்டத்திலும் எழுதப்பட்ட உடன்படிக்கைகளில் இருந்து இலங்கை அரசாங்கங்கள் பின்வாங்கியிருக்கின்றன. ஒரு பிராந்தியப் பேரரசாகிய இந்தியாவும் இந்தவிடயத்தில் அழுத்தத்தை பிரயோகிக்க முடியவில்லை. உலகப் பொது மன்றமாகிய ஐநாவும் அழுத்தத்தை பிரயோகிக்க முடியவில்லை. அப்படியென்றால் ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் எனப்படுவது வெறும் பிரசன்னமாக மட்டும் இருந்தால் போதாது. அதைவிட ஆழமான பொருளில் அழுத்தத்தை பிரயோகிக்கும் ஒரு பிரசன்னம் தேவைப்படுகிறது என்று பொருள்.

சமூக செயற்பாட்டாளராகிய செல்வின் சொன்னார்... நோர்வையின் அனுசரனையுடனான சமாதான முயற்சிகள் தோல்வியுற்றபின் ஒஸ்லோவில் நடந்த ஒரு சந்திப்பில் சிறப்புத் தூதுவரான சூல் ஹெய்ம் பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்திருக்கிறார்... "நோர்வே ஓர் அனுசரணையாளர் மட்டுமே. அனுசரணை என்பது, சந்திக்கும் இடங்களையும் சந்திப்பு நேரங்களையும் ஒழுங்குபடுத்துவது. சந்திப்புக்கான பயண ஏற்பாடுகளையும் தங்குமிட ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவது என்பவைதான்" என்று. அவர் இவ்வாறு கூறிய பின் நிகழ்ந்த மற்றொரு தனிப்பட்ட சந்திப்பில் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியான மார்ட்டி அஹ்ரிசாரி - அவர்தான் பலஸ்தீனத்தில் பேச்சுவார்த்தைகளை ஒழுங்குபடுத்தியவர் - இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளை குறித்து பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்துள்ளார். "இரண்டு தரப்பும் சமாதானத்துக்கு தயாரில்லை என்றால், அந்த இடத்தில் நான் இருந்திருந்தால், இரண்டு பேரையும் வீட்டுக்கு அனுப்பியிருந்திருப்பேன். பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்திருக்கமாட்டேன்" என்று. சூல் ஹெய்ம் மற்றும் மார்ட்டி அஹ்ரிசாரி ஆகியோரின் அனுபவங்களின் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் ஒரு முடிவுக்கு வரலாம். ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் எனப்படுவது வெறுமனே பிரசன்னமாகவோ அல்லது நடுநிலை வகிக்கும் மத்தியஸ்தராகவோ அல்லது அனுசரணையாளராகவோ இருந்தால் மட்டும் போதாது. நீதியான சமாதானத்தை நோக்கி அழுத்தங்களைப் பிரயோகிக்குமளவுக்கு ஒரு மூன்றாவது தரப்பின் வகிபாகம் இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வருமளவுக்கு தமிழ்த் தரப்பு பேரபலத்துடன் இல்லை என்பதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளில் உள்ள அடிப்படைப் பலவீனம் ஆகும்.

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 302
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

கோடுகள் போடுங்கள்;
கோடுகள் கண்கவர்
ஓவியம் ஆகிடும்!
காடுகள் தீட்டுங்கள்;
காட்டுமரக் கொப்புகளில்
குயில்வந்து கூவிடும்!

நீர்வயல் வரையுங்கள்;
நீலவான் குடையின்கீழ்
நெற்கதிர்கள் ஆடிடும்!
பேர்புகழ் வேண்டுங்கள்;
ஊர்புகழ் நல்வாழ்வு
உமைத்தேடிக் கூடிடும்!

வெண்மதியை வரையுங்கள்;
வெண்மதியின் ஒளியுங்கள்
வீட்டுக்குள் பாய்ந்திடும்!
கண்ணிரண்டு வரையுங்கள்;
கருணையுடன் காதலையும்
கடைவிரித்துக் காட்டிடும்!




Happy
Holidays
இனிய விடுமுறைகால
நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

7th Annual Awards Gala

EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX
REALTY INC., BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX ACE
Experts In The Local Market

## எமக்கு ஆதரவு அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகள்

## அனைவருக்கும் எங்கள் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

# Congratulations to our 2022 Awards winning Agents!






































































3 - 1286 Kennedy Rd, Toronto M1P 2L5 | ✆ 416.270.1111 | 🖷 416.270.7000

7th Annual Awards Gala

EXPERIENCE THE DIFFERENCE

RE/MAX REALTY INC., BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED


RE/MAX ACE

Experts In The Local Market

# WE'RE HIRING

## SALES REPRESENTATIVES & BROKERS

www.RemaxACE.com



3 - 1286 Kennedy Rd, Toronto M1P 2L5 | ✆ 416.270.1111 | 🖷 416.270.7000

# Merry Christmas

AND HAPPY NEW YEAR!

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு இரண்டுமே, கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கவும், சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அந்த அனுபவங்களிலிருந்து பபலவற்றைக் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறன.

தைரியம், நம்பிக்கை மற்றும் தீவிர முயற்சியுடன், நீங்கள் விரும்பும் அனைத்தையும் அடையவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஆரோக்கியமானதும் வளமானதுமான கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன். உங்கள் கனவுகள் அனைத்தும் நனவாகும் என்றும் நம்புகிறேன்.

## 2023 ம் ஆண்டை நாம் அனைவரும் வரவேற்போம்



ONTARIO

## Aris Babikian

MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

# இருப்பதை விட்டு பறப்பதைப் பிடிக்கும் இலங்கை அரசு

**சிவா பரமேஸ்வரன் - லண்டன்**

CEYLON TEA
SYMBOL OF QUALITY

**வி**ற்காத சரக்கிற்கே விளம்பரம் அதிகம் என்று ஒரு செலவடை உண்டு.

பட்டுப்புடவை வாங்கினால் யானை இலவசம், பலூன் வாங்கினால் கொண்டை ஊசி இலவசம், மூன்று காலி பாக்கெட்டுகளைத் திருப்பிக் கொடுத்தால் நான்காவது இலவசம், விளம்பரப்படுத்தப்படும் பொருளை பயன்படுத்தாத சினிமாக்காரர்களைக் கொண்டு அந்தப் பொருளுக்கு விளம்பரம் இப்படி அன்றாடம் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, ஏன் இப்போது சமூக ஊடங்களாக யூடியூப் தொடக்கம் அனைத்திலும் விளம்பரம்...விளம்பரம்...விளம்பரம்.

ஒரு பொருளுக்கு விளம்பரம் தேவையா, அப்படியென்றால் எங்கு எப்படியான மக்களை கவர்ந்திழுக்க வேண்டும், அதற்கான உத்திகள் எப்படியிருக்க வேண்டும், யாரை இலக்கு வைத்து அந்த விளம்பரம் செய்யப்படுகிறது, அதற்காக செலவிடப்படும் பெருந்தொகையான பணத்தை விற்பனை மூலம் மீண்டும் ஈட்ட முடியுமா? இப்படி ஓராயிரம் கேள்விகள் கேட்கப்படும் ஒரு பொருளிற்கான விளம்பரத்தை செய்வதற்கு முன்னால். அதே நேரம் விளம்பரம் மக்களிடம் சரியாகச் சென்றடையவில்லை, எதிர்பார்த்த பலனைப் பெற்றுத்தரவில்லை, போட்ட காசு வரவில்லை என்றால், அந்த விளம்பரத்திற்கு பொறுப்பான நபர் பதவி இழப்பது நிச்சயம்.

ஆனால், இப்படியான பொதுவான நிலைகள் ஏதும் இலங்கைக்கு பொருந்தாது. பொறுப்புக்கூறல் என்பதற்கும் இலங்கைக்கு ஒவ்வாத ஒன்று என்ற விமர்சனம் சர்வதேசளவில் உள்ளது. இதில் இந்த பொறுப்புக்கூறல் மிகவும் முக்கியமானது. ஏனென்றால், இது அனைத்து துறைகளுக்கும், அனைத்து மக்களுக்கும் பொருந்தும் ஒன்று.

உதாரணமாக, அரச நிறுவனம் ஒன்றிற்கு விளம்பரம் செய்யப்படுகிறது என்று வைப்போம். எடுத்துக்காட்டாக இலங்கை போக்குவரத்து சேவை (ரயில் மற்றும் பேருந்து) அல்லது சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் வர்த்தகத்தை மேம்படுத்த பன்னாட்டளவில் விளம்பரம் செய்யபட வேண்டிய சூழல் ஏற்பட்டு அது செய்யப்படுகிறதென்றால் அரசு ஒரு விளம்பர நிறுவனத்தை அணுகி உத்திகளை வகுத்து பல வகையான விளம்பரங்களைத் தயாரித்து அதை பல ஊடகங்களில் பயன்படுத்துவார்கள். அதற்கான ஒப்பந்தத் தொகை அந்த விளம்பர நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுவிடும். ஆனால் அதன் மூலம் வர்த்தகம் பெருகியதா என்பதற்கு அந்த நிறுவனம் பொறுப்பாகாது, அரசும் முயன்றோம் முடியவில்லை என்று கூறி கைகழுவி விடும். அதாவது எவ்வகையிலும் யாருக்கும் பொறுப்புக்கூறல் இல்லை.

இதேவேளை, ஒரு தனியார் நிறுவனம் இப்படியான ஒரு விளம்பர பிரச்சாரத்தை முன்னெடுத்து அது தோல்வியில் முடிந்தால் சந்தேகத்திற்கு இடமின்றி சில தலைகள் உருளும். அரச துறைகளில் அது நிகழாது. அதன் காரணமாகவே அரசின் பணம் விரயமாகிறது. இது இலங்கை மட்டுமல்ல, இந்தியா உட்பட பல நாடுகளில் நிலவுகிறது.

ஆனால் இதில் மிகவும் முக்கியமாக ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். பெரும்பாலும் நட்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனம் அல்லது துறை அல்லது சேவைக்கே மிகப்பெரிய அளவில் பணம் செலவிடப்படும். இப்படியான சூழலில் இப்போது எழுந்துள்ள கேள்வி இலங்கை தேயிலை அல்லது சிலோன் டீ உலகளவில் மிகவும் பிரபலமாக இருக்கும் நிலையில் அதை ஐரோப்பா மற்றும் அமெரிக்க சந்தைகளில் ஊக்குவிக்கும் வகையில் அரசு 1.5 மில்லியன் டாலர்களை செலவிடும் என்று அரசு கூறியுள்ளது.

இலங்கைக்கு பன்னாட்டளவில் அங்கீகாரத்தையும் பெருமையையும் பெற்றுத் தந்தது அதன் தேயிலை. இந்திய வம்சாவளி தமிழர்கள் தமது முதுகு முறிய, ரத்தத்தை நீராக்கி, உழைப்பை உரமாக்கி வளர்த்தெடுக்கும் தேயிலை நாட்டிற்கு பெருமை தேடித்தந்தாலும், அவர்கள் இன்னும் நவகாலனித்துவ அடிமைகளாகவே உள்ளனர். உள்நாடும் வெளிநாடும் அவர்களை எவ்விதமான சிந்தனையோ கரிசனையோ இல்லாமல் கைவிட்டது. இலங்கையின் தேயிலை தோட்டங்கள் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு. அவர்கள் வாழும் லயங்கள் எனப்படும் குதிரை லாயங்கள் ஒன்று மட்டுமே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.




அவ்வகையில் விமர்சனங்கள், விதி மீறல்கள், மனித உரிமை மதிக்கப்படாத நிலையிலும், அதற்கு பன்னாட்டளவில் ஒரு மதிப்புள்ளது. அதை பயன்படுத்திக் கொள்ள தவறிய அரசு, இப்போது அதற்கான சந்தையை ஊக்குவிக்க 551,137,210 ரூபாவை செலவிடப் போவதாக அறிவித்துள்ளது. இது யாருடைய பணம்? இந்த முன்னெடுப்பிற்கு முறையான அனுமதி பெறப்பட்டதா? விளம்பர முன்னெடுப்பு தோல்வியடைந்தால் அதற்கு யார் பொறுப்பு? மௌனமே பதிலாக இருக்கும்.

இப்போது "சிலான் டீ" என்ற வர்த்தக பெயரின் கீழ், இலங்கை தேயிலையை அமெரிக்க - ஐரோப்பிய சந்தைகளில் பரப்புவதற்கு அப்பாற்பட்டு அந்தப் பெயரில் உடனடியாக பருகக் கூடிய மென்பானங்கள் தயாரிப்பில் ஈடுபடப் போவதாக அரசு கூறுகிறது.

இயற்கை விளை பொருளான தேயிலையை ஊக்குவிப்பதில் ஒரு நியாம் உள்ளது. ஆனால் மென்பான விற்பனையில் அரசு ஈடுபட வேண்டுமா? அதுவும் தனது பிரஜைகளுக்கு இரண்டு வேளை உணவைக்கூட முழுமையாக அளிக்க முடியாத அரசு அகலக்கால் வைப்பது முறையானதா? மௌனமே பதிலாக இருக்கும். அடுத்த ஆண்டு (2023) அமெரிக்க உட்பட இதர மேற்குல நாடுகளில் இந்த முன்னெடுப்பு செய்யப்படும் என்று தேயிலை ஊக்குவிப்பு வாரியத்தின் பணிப்பாளர் பவித்ரா பீரிஸ் கூறியுள்ளார்.




இலங்கை தனது தேயிலை உற்பத்தியில் 95% ஏற்றுமதி செய்கிறது என்று கூறும் அவர் மேலும் 20 நாடுகளில் தமது விளம்பர முன்னெடுப்புகளைச் செய்யவுள்ளதாக கூறுகிறார். எனினும் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா மீதே அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளது பல கேள்விகளை எழுப்புகிறது. நானறிந்த வகையில் "சிலோன் டீ" அந்த இரண்டு பிரதேசங்களிலும் ஏற்கெனவே பிரபலமாக உள்ளது. அதிலும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள், பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இலங்கை தேயிலை நன்கு அறியப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலையில் 50% அளவிற்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கே ஏற்றுமதியாகிறது. மேலும் 17% ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளுக்கு செல்கிறது என்று கூறும் பீரிஸ் இதர ஐரோப்பிய நாடுகளில் தமது தேயிலைக்கான கேட்பை அதிரிக்கச் செய்யவே 1.5 மில்லியன் டாலர்கள் முதலீடு செய்யப்படுகிறது.

இலங்கையைப் போலவே மனித உரிமைகளை துச்சமாக மதிக்கும் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளிற்கு சுமார் 67% தேயிலை உற்பத்தியை செய்யும் அரசு அதையே மேலும் 90% அளவிக்கு ஏற்றுமதி செய்ய முன்வரலாமே என்ற கேள்விக்கு மௌனமே பதிலாக இருக்கும்.

மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் எந்த பொருளும் மனித உரிமைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பது இலங்கை அரசு அறிந்த ஒரு விஷயமாகவே இருக்கும். அப்படியிருக்கும் போது எதன் அடிப்படையில் மேற்குலக நாடுகளை இலக்கு வைத்து பல்லாயிரம் கோடி ரூபாவை இலங்கை அரசு இந்த முன்னெடுப்பைச் செய்கிறது?

ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் ஜி எஸ் பி+ விஷயத்தில் அரசு ஏற்கெனவே கையைச் சுட்டுக்கொண்டது. அதற்கான பதிலையே இன்னும் பொறுப்புக்கூறல் மூலம் அளிக்கவில்லை. இச்சூழலில் தமது தேயிலையை என்னதான் விளம்பரம் செய்து ஊக்குவித்தாலும், ஜனநாயக விழுமியங்களில் நம்பிக்கை கொண்டுள்ள மேற்குல நாடுகள் எதன் அடிப்படையில் இலங்கை தேயிலையை வாங்க முன்வரும் என்பது சற்று ஐயமாகவே உள்ளது.

உள்நாட்டில் இரத்தத்தைச் சிந்தி உழைக்கும் மக்களை சற்றேனும் கண்டுகொள்ளாத அரசு அவர்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் பற்றிய உண்மைகளை ஏற்கெனவே அறிந்துள்ள அமெரிக்க-ஐரோப்பிய நாடுகள் அதைப் புறந்தள்ளி எப்படி சிலோன் டீயை வாங்க முன்வரும் என்பதெல்லாம் அரசுக்கும் புரியாமலும் தெரியாமலும் இல்லை.



ஏதோ ஒரு அசட்டு தைரியத்தில் அல்லது தவறான வழிகாட்டலில் அரசு 1.5 மில்லியன் டாலர்களை செலவிட முன்வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சிங்க இலச்சினையைக் கொண்ட "சிலோன் டீ" இலங்கையில் பறிக்கப்படும் தேயிலைக்கு மட்டுமே அளிக்கப்படும், அப்படிச் செய்யப்படும் போது அது பன்னாட்டளவில் மேலும் வரவேற்பை பெறும் என்று அரசு கூறுகிறது. எதன் அடிப்படையில் அந்த நம்பிக்கை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஜப்பான் மற்றும் சவுதி அரேபியாவிற்கான ஏற்றுமதியையும் மேலும் அதிகரிக்க அரசு எண்ணியுள்ளது. கோவிட்-19 சமயத்தில் அந்த நோய் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களை இஸ்லாமிய மரபுகளின்படி புதைப்பதற்கு பதிலாக எரித்தே தீருவோம் என்று ஒற்றைக்காலில் நின்று முஸ்லிம் மக்களின் விரோத ததிற்கு ஆளாகி பின்னர் அதிலிருந்து பின்வாங்கிய அரசு எப்படி சவுதி போன்ற நாடுகளிடமிருந்து வர்த்தக ரீதியான ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும். அதே போன்று சீனாவுடன் கொஞ்சி குலவுவதை எந்தளவிற்கு ஜப்பான் சாதகமாக ஏற்றுக்கொள்ளும் என்பதிலும் கேள்விகள் உள்ளன.

மூன்றுகால் சிங்க இலச்சினையை பதித்து - குளிரூட்டப்பட்டு உடனடியாக குடிக்கும் தேயிலை மென்பானம் போன்றவற்றை தயாரித்து அதை பன்னாட்டளவில் சந்தைப்படுத்த அரசு விழைகிறது.

சின்னம் மட்டுமே வெற்றியைத் தேடித் தராது என்பதை இலங்கை ஆட்சியாளர்களுக்கு தேர்தல் உணர்த்தியிருக்க வேண்டும். அதை தொடர்ச்சியாக எந்த ஆட்சியாளர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

பல பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தேயிலை உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ளோரிடம் இந்த விஷயம் குறித்து பேசிய போது அனைவரும் கருத்தும் அநேகமாக ஒன்றாகவே இருந்தது. அதாவது வெளிநாட்டிற்கு மேலும் ஏற்றுமதிகளை அதிகரித்து அதன் மூலம் வர்த்தகத்தைப் பெருக்கி பல மில்லியன் அளவிலான டாலர்களை நாட்டிற்கு கொண்டுவந்து அதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணலாம் என்று அரசு என்னுகிறது. அது பிழையானது-காணல் நீர் போன்றது. நாடு இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியில் 1.5 மில்லியன் டாலர்களை செலவிடுவது சரியான வழிமுறை கிடையாது் அது எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தாது என்றே கருத்து தெரிவித்தனர். ஆனால் இதை அரசிற்கு அவர்கள் எடுத்துக்கூறியும் அதை ரனில்-ராஜபக்ச அரசு கேட்பதாக இல்லை.



இந்த 1.5 மில்லியன் டாலர்களை தோட்ட தொழிலாளிகள் மீது முதலீடு செய்தால் உற்பத்தி அதிகரிக்கும். அது தானகவே இலாபத்திற்கான கதவுகளை திறக்கும். ஆனால் மூடிய கண்களுடன் செயல்படும் அரசு பணத்தை விரயமாக்குவதிலேயே குறியாக உள்ளது என்ற குற்றஞ்சாட்டை புறந்தள்ள முடியவில்லை.

# காருக்குள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கொழும்பு ஜனசக்தி குழுமத்தின் தலைவர் தினேஷ் சாப்டர் மரணம்



கொழும்பு - பொரளை மயான பகுதியில் ஜனசக்தி குழுமத்தின் தலைவர் தினேʼ சாப்டர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
அடையாளம் தெரியாத கும்பல் ஒன்றினால் குறித்த வர்த்தகர் கடத்தப்பட்டு வியாழக்கிழமை (15) மாலை பொரளை மயானத்தில் கார் ஒன்றிற்குள் இருந்து கைகள் கட்டப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டிருந்தார்.
அதன் பின்னர் தேசிய வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த போதிலும் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.
இந்த நிலையில் குறித்த வர்த்தகர் காணாமல் போனமை மற்றும் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணையில் வெளிவந்த தகவல்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பல கோடி ரூபா கடன் தொகை ஒன்றை வழங்கப் போவதாக தனது மனைவியிடம் அவர் கூறிவிட்டு கறுவாத் தோட்டம் ப்ளவர் வீதியில் உள்ள அவரது வீட்டை விட்டு வெளியேறிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.
அதன் பின்னர் சிறிது நேரம் கழித்து அவரது மனைவி அவரின் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்ட போது, வர்த்தகரின் தொலைபேசி இயங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி ஊடாக கிடைத்த சிக்னல்களுக்கு அமைய விசாரணை நடத்திய போது அவரது தொலைபேசி பொரள்ளை மயானத்திற்கு அருகில் இருப்பது கண்டறியப்பட்டது.

இதில் சந்தேகமடைந்த அவரது மனைவி, விரைந்து செயல்பட்டு நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரிடம் கூறி பொரள்ளை மயானத்திற்கு அருகில் பார்க்குமாறு அனுப்பி வைத்துள்ளார்.

இதன் போது, அங்கிருந்த காரொன்றில், தினேʼ சாப்டர் கைகள் கட்டப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததாகவும், அங்கு சாரதியும் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
அதன் பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் தினேʼ சாப்டர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும் சிகிச்சைப் பலனின்றி இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

# தனது சொந்த மகளை மது போதையில் பாலியல் வன்புணர்வு புரிந்த தந்தைக்கு நீதிபதி இளஞ்செழியன் வழங்கிய 15 வருட கடூழிய சிறைத் தண்டனை



சொந்த மகளை மது போதையில் பாலியல் வன்புணர்வு புரிந்த தந்தைக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று (15) வியாழக்கிழமை 15 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.
கடந்த 2015 ஆம் ஆண்டு தை மாதம் மாங்குளம் பகுதியை சேர்ந்த 11 வயது பாடசாலை மாணவியாகிய தனது சொந்த மகளை மது போதையில் இருந்த அவரது தந்தையாரினால் பாலியல் வன்புணர்வு செய்த வழக்கில் மேற்படி தண்டனைத் தீர்ப்பு வவுனியா மேல் நீதி மன்றினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாகிய பாதிக்கப்பட்ட சிறுமி, தாயார் வீட்டில் இல்லாத போது மது போதையில் வந்து தன்னை பாலியல் வன்புணர்வு புரிந்ததாக தனது தந்தை மீது குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.
வவுனியா நீதவானின் நேரடி உத்தரவின்பேரில் கடந்த 6 மாத காலமாக சிறுவர் இல்ல மொன்றில் குறித்த சிறுமி வசித்து வந்துள்ளார்.
பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி கன்னிச்சவ்வு சிதைவடைந்து உள்ளதாக சட்ட வைத்திய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

சிறுமி 11 வயதுடையவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவரது பிறப்பத்தாட்சிப் பத்திரமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் சாட்சியத்தை சட்ட வைத்திய அறிக்கை ஒப்புறுதி செய்வதாகக் குறிப்பிட்ட நீதிபதி இளஞ்செழியன் எதிரியை குற்றவாளி எனக் குறிப்பிட்டு 15 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கியதுடன், சிறுமிக்கு 3 லட்ச ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும் என தீர்ப்பளித்தார்.

இழப்பீட்டுத் தொகையை வழங்க தவறும் பட்சத்தில் 9 மாத கடூழிய சிறையும், தண்டப் பணம் செலுத்தத் தவறினால் மேலும் 3 மாத கால சிறை தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று தீரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை மகளையே பாலியல் வன்புணர்வு புரிவது உலக நீதி, இயற்கை நீதி, சமூக நீதி என்ற அனைத்துக்கும் முரணான ஒரு குற்றச் செயலாகும் என நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பின் போது தெரிவித்துள்ளார்.

## Canadian Tamil Chamber of Commerce Hosted Its "Christmas Mixer - 2022"

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய "நத்தார் கொண்டாட்ட நிகழ்வு – 2022"





Canadian Tamil Chamber of Commerce hosted its ''Christmas Mixer - 2022'' on 14th December 2022 at Whiteshield Banquet Hall, located at 2300 Lawrence Ave E., Scarborough, ON M1P 2R2.

This event was hosted to celebrate the end of the year 2022 and Christmas with fun, festive dancing and dinner!

Many members, board of directors, friends and representatives from media outlets were gathered there to grace the event.

கனடாவில் 30 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் "கனடிய வர்த்தக சம்மேளனம்" தனது "நத்தார் கொண்டாட்ட நிகழ்வு-2022" என்னும் ஒன்று கூடலை புதன்கிழமை (14-12-2022) மாலை ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Whiteshield Banquet Hall மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அங்கு எடுக்கப்பெற்ற புகைப்படங்களை இங்கே காணலாம்.





## A State Award Festival in Scarborough, hosted by Hon. Shaun Chen - MP for Scarborough North, in Canada

கனடிய செய்திகள் Canadian News

# Scarborough North தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் Hon. Shaun Chen - MP அவர்களால் பிரிட்டிஷ் மகாராணியின் சேவை ஞாபகார்த்த பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அன்பர்கள்



கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் Scarborough North.. தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் Hon. Shaun Chen - MP நடத்திய ஒரு அரச விருது வழங்கும் விழாவில் பிரிட்டிஷ் மகாராணியின் சேவை ஞாபகார்த்த பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அன்பர்கள் சிலரை இங்கே காணலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசின் கனடிய பிரிவு முக்கிய உறுப்பினர் மரியராசா, வர்த்தகப் பிரமுகர் தனா மாணிக்கவாசகர், சமூகசேவை நிறுவனத்தின் தலைமை அதிகாரி விஜயா குலா, பல்வைத்தியர் சபேசன் தங்கதுரை, கனடா ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்த்தானத்தின் முக்கிய தூண்களாக விளங்கும் “குருசாமிகள்” சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் தம்பிராஜா அவர்கள் மற்றும் தமிழ்ப் பூங்கா“ தமிழ்ப் பள்ளி அதிபர் திருமதி. யோகா அருள் ஆகியோர் உட்பட பலர் மேற்படி விருதுகளைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.














கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

## வீணாவின் கவிக்கணை

இலை உதிர்காலம்
வருவது,
மரத்தை அழிப்பதற்கல்ல,
பனியை வரவேற்கவும்,
அதன் குளிர்மையில்
இலைகள் அழுகிடாமல்
காக்கவும்,
மனிதனுக்கு துயரம்
வருவது,
அவன் வாழ்க்கையை
அழிப்பதற்கல்ல,
அவனுக்கு நேரவிருக்கும்
துன்பங்களை
எதிர்கொள்ளவும்,
அதன்மூலம் அவனை
பக்குவப்படுத்தவுமே.


ஒலி அலைகளில் புதுயுகம்

yugam radio & TV

24 மணிநேரமும் உங்களுடன்



நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள: 416.455.4343, 647.450.4345

தொலைபேசியூடாக நிகழ்ச்சிகளைக் கேட்க

416.623.8110
647.450.4345

இணையம்
www.yugamradio.com
www.webyugam.com



கணபதி ரவீந்திரன் 416 – 898 – 7284
Yugam Media Inc
2900 Markham Rd Unite U21, Toronto ON M1X 1E6
(Markham & McNicoll)
Tel: 416-297-5002

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# திருவள்ளுவர் பாரதிக்கோர் வழிகாட்டி

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா
நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்
Jothy.thirukural@gmail.com



தமிழினத்தின் பழம்பெரும் மரபுகளை இந்த உலகிற்கு எடுத்தியம்பும் அற்புத நூல் திருக்குறள். இந்நூல் அறிவுத்தேடலுக்கான அரியதொரு ஞானப்பேழையாக விளங்குகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பிற் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பல்லின மக்களிடையேயும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வாழ்வுப் பிணிகளைப் போக்கும் அரியதொரு ஔடதமாகத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இந்நூலைப் படைத்துள்ளார். இந்நூற் கருத்துகளைப் பின்பற்றிப் பலரும் வாழ்ந்து காட்டியுள்ளனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அதேநேரம் திருக்குறள் கூறும் அறநெறிகளை அடியொற்றிப் பலரும் பல படைப்புகளையும் உருவாக்கியுள்ளனர். மகாகவி பாரதியார் அவர்களும் திருவள்ளுவப் பெருந்தகையின் கொள்கைகளிற் தணியாத பற்றுக் கொண்டவராக விளங்கினார். திருவள்ளுவரின் வழியிலே வாழ்ந்தும் காட்டினார்.

அன்பு, அறம், மொழி, கல்வி, பெண்முன்னேற்றம், சமத்துவம், தன்னம்பிக்கை, பொருளாதாரச் சிந்தனைகள் போன்ற இன்னோரன்ன விடையங்களிற் பாரதியின் படைப்புகள் வள்ளுவம் வகுத்த நெறியின் விளக்கமாக உள்ளதனை அவதானிக்க முடிகிறது. பாரதியார் என்ற மனிதரை வெறும் கற்பனைக் கவிதைகளின் வடிவமாய் மட்டும் நாம் பார்த்துவிட முடியாது. தன் நாட்டையும், தன் இனத்தையும், தன் மொழியையும் உயிரிலும், உணர்விலும் இணைத்துக்கொண்டு மானிடம் பாடவந்த மாமனிதன் இவர். 1882 ஆம் ஆண்டு எட்டயபுரத்திற் பிறந்த பாரதியார் தனது முப்பத்தொன்பது வயதுவரைதான் வாழ்ந்தார். அந்தக் குறுகிய காலப்பகுதிக்குள் தன் எழுத்துக்களாலும், செயல்களாலும் பல சமூகச் சீர்கேடுகளைக் களைந்தெறிய முற்பட்ட புரட்சியாளனாக விளங்கினார். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திற் பாரதியின் பாக்கள் மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தின.

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை**

என்று புலவர்களைப் புகழ்ந்த பாரதியார் வள்ளுவரையே தெய்வமாகப் பார்த்தாரென்பதனைக் கீழ்வரும் பா வரிகளால் அறிய முடிகிறது.

**கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளிதாசன் கவிதை புனைந்ததும்...
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான் மறை செய்ததும்...**

**வள்ளுவன்தனை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்டது தமிழ்நாடு..**

என்று திருவள்ளுவரின் பெருமைகளைப் பலவாறு எடுத்துரைத்தார் பாரதியார்.

இருவரதும் மொழிமீதான மிகுந்த பற்று நம்மை வியக்கவைக்கின்றது. அவர்களது மொழிப்பற்று எமக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. ஒரு இனத்தின் அடையாளமாகவும், அவ்வினத்தின் பண்பாட்டினைக் காவிச்செல்லும் வண்டியாகவும் விளங்குவது அவ்வினக் குழுமத்தின் மொழியேயாகும். மொழி தெரியாத தமிழர்களாக வாழ்வதென்பது நம் இனத்திற்கான சாபக்கேடு. எனவே தொடர் தலைமுறையினருக்கும் எமது மொழியைக் கொடுத்துச் செல்வது நம் ஒவ்வொருவருக்குமான மிகப்பெரும் கடமையாகும்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு**

(குறள் 1)

என்று அன்னை தமிழையும் ஆண்டவனையும் ஒன்றாக நோக்கினார் திருவள்ளுவர். உலகோர் அனைவருக்குமான பொதுநெறியாகத் திருக்குறள் படைக்கப்பட்டாலும் தன் தாய்மொழி வணக்கத்தோடுதான் நூலைப்படைத்துள்ளார். தான் ஒரு தமிழர் என்பதைத் தனது முதலாவது குறளிலேயே தெட்டத் தெளிவாக உணர்த்தியுள்ளார். ஒல்காப்புகழ் தொல்காப்பியரின் வழிநின்றே திருவள்ளுவர் நூல் செய்துள்ளாரென்பதனை நாம் பலவழிகளிலும் நோக்க முடிகிறது.

பன்மொழிகளையும் நன்கு கற்றுணர்ந்த பாரதி அன்னைத்தமிழே இவ்வுலகில் உயர்ந்ததென்றார். பாரதியின் மொழிப் பற்றும் அதிசயிக்கத்தக்கது.

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்..** என்றார்.

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே
அதைத் தொழுது படித்திடடி பாப்பா**
என்று குழந்தைகள் உள்ளத்திலும் எம் தாய்மொழியின் பெருமைகளைப் பதிய வைத்தார்.

**வேறு வேறு பாசைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய்
போ போ.....**
என்று கோபம் கொண்டார் பாரதி.

**தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும்** என்ற முனைப்போடு செயற்பட்டார். **தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்** என்று கனாக்கண்டார்.

**வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து**
என்று பனம்பாரனார் அவர்கள் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திற் கூறிய சங்ககாலத் தமிழகத்தின் எல்லைகளை உடைத்துக்கொண்டு பாரதி கண்ட கனவுபோலத் தமிழ்மொழியானது இன்று உலகெங்கிலும் பரந்து வளம் சேர்த்துக்கொண்டிருக்கிறது.

இருவரதும் படைப்புகளை நாம் படிக்கும் பொழுது நமக்குள் ஒரு தன்னம்பிக்கை பிறக்கின்றது. எந்தவொரு விடையத்தையும் திறம்படச் செய்வதற்கு நமக்கு முதலிற் தேவையானது தன்னம்பிக்கையே. பிறந்தோம் இறந்தோம் என்றில்லாமல் வெற்றியாளர்களாகவும், உயர் சாதனைகளை நிகழ்த்துபவர்களாகவும் வாழ வேண்டுமென்ற அவா பலரிடமும் உண்டு. வெற்றி பெற்ற மனிதர்களின் வரலாறுகளைப் புரட்டிப் பாருங்கள். பலருடைய வெற்றிக்கு மூலதனமாக இருப்பது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமேயாகும்.

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.**

(குறள் 619)

ஒருவரது விதி அவரது வெற்றிக்கு உதவவில்லையென்றாலும், அவரது உடல் வருத்திச் செய்யும் கடின உழைப்பிற்குரிய பலாபலன் கிடைக்கும் என்கிறது திருவள்ளுவம்.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.**

(குறள் 597)

ஊக்கமுடைய ஒருவர் எத்தகைய தடைகள் வந்தாலும் தளர்வுறாது மனவலிமையுடன் செயலாற்றுவார். இதனை ஒரு போர்க்களத்திலே போரிடும் யானை எத்தனை அம்புகள் தன் மேனியிற் பட்டாலும் தோற்றுப் பின்வாங்காது அப்போர்க்களத்திலேயே நின்று தன் வெற்றியை நிலைநாட்டும் என்ற தன்மையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.. ஆகவே தன்னம்பிக்கைதான் வெற்றியின் அடித்தளம் என்பதனை நாம் உணர முடிகிறது.

திருவள்ளுவர் கூறிய தன்னம்பிக்கை போன்றே மகாகவி பாரதியாரும் தன் பாக்களால் மக்கள் மத்தியிற் தன்னம்பிக்கையினை விதைத்தார். **"மனதில் உறுதி வேண்டும்"** என்ற பாரதி. **"நான் வீழ்வேனென்று நினைத்தாயோ"** என்று தனது புதிய ஆத்திசூடியிற் கேட்டார். **"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"** என்கிறார். எனவே அயராத உழைப்பும், தன்னம்பிக்கையுமே ஒருவனை வாழ்வில் உயர்நிலைக்கு இட்டுச் செல்லவல்லவை.

இவர்கள் இருவருமே கல்வியின் மகத்துவத்தையும், கல்வியால் வரும் உயர்வுகளையும் மக்களுக்குத் தம் எழுத்துகளால் எடுத்துக்கூறி ஒரு அறிவுள்ள சமூகத்தைக் காண விளைந்தார்கள். கல்விபோல் அறியாமையைப் போக்கும் அரியதொரு ஔடதம் இவ்வுலகில் வேறேதுமில்லை என்பதனை மக்களுக்கு உணர்த்தினார்கள்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.**

(குறள் 400)

இவ்வுலகில் எத்தனை செல்வங்கள் கொட்டிக்கிடந்தாலும் ஒருவருக்கு அழிவற்ற சிறந்த செல்வம் கல்வியேயாகும் என்கிறது திருவள்ளுவம்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.**

(குறள் 398)

ஒருவர் கற்ற கல்வியானது அவரது ஏழுபிறப்பிற்குந் தொடர்ந்து வரக்கூடியதென்றும்,

**யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.**

(குறள் 397)

என்ற குறள்மூலம், கற்றவர்களுக்கு எந்தநாடும், எந்த ஊரும் தனது நாடும், தனது ஊரும் போலவே இருக்குமென்றார். கல்வியானது ஒருவனை உலகறியச்செய்யுந் தன்மையதென்பதை வலியுறுத்தியுள்ளார், இத்தனை பெருமைமிகு கல்வியை எதற்காக இறக்கும்வரை கற்காது இருக்கின்றீர்களென உலகை நோக்கிக் கேட்டார்.

**மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-
மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.**
என்ற மூதுரைச் செய்யுளையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்குஎழுத்தறி வித்தல்**

அடிப்படைக் கல்வியைக்கூடப் பெற வாய்ப்பில்லாத மக்களின் நிலைகண்டு பாரதியார் மிகவும் வருந்தினார். அன்ன சத்திரம் மற்றும் கோயில் முதலியவற்றை அமைத்துப் பராமரித்தலைக் காட்டிலும், ஓர் ஏழைக்குக் கல்வி புகட்டுதலே மேலானது என்றார்.

**வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளவூர்கள்
நகர்களெங்கும் பலபலபள்ளி
தேடு கல்வியிலாத தொரூரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்**

என்று கல்வி இல்லாத ஊரைத் தீக்கிரையாக்க வேண்டுமென அறைகூவலிட்டான் பாரதி.

**இளமையிற் கல்வி சிலையில் எழுத்து** எனும் பழமொழிக்கிணங்க இருவருமே இளமையிற் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

**மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.**

(குறள் 70)

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.**

(குறள் 69)

என்ற இக் குறள்களின் வழி, உலகு வியந்துகொள்ளும் வகையிற் பண்பாலும், கல்வியாலும் உயர்நிலையில் இருப்பதே பிள்ளைகள் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமையெனவும், தன் பிள்ளைகளின் உயர்வினை மற்றவர்கள் போற்றக்கண்டு பெற்றதாய் குழந்தையை ஈன்றெடுத்த பொழுதைவிடப் பெரிதும் மகிழ்வாளெனவும் கூறுவதன்மூலம் இளமையிற் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவதனை உணர முடிகிறது. ஆனால் இன்றும் வறுமையின் பிடியிற் சிக்கியும், அடிமைப்படுத்தல்களாலும், வேறும் பல காரணங்களாலும் குழந்தைகளின் கல்வி தொலைந்துபோகிறது.

**காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா**

என்று பாரதியும் தன் பாவாற் குழந்தைகளை நெறிப்படுத்துகிறார். ஒவ்வொரு விடியற்பொழுதும் கல்விச் சிந்தனையோடு விடிய வேண்டுமென வலியுறுத்துகிறார்.

கல்வியெனும் ஆயுதம் ஒன்றே உலகில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைத் தகர்க்கவல்ல ஆயுதம் என்பதனை இருவருமே விளங்க வைத்துள்ளனர். ஏற்றத்தாழ்வும், சாதிப்பாகுபாடும், தீண்டாமையும் இவ்வுலகிலே கொடிதிலும் கொடியவை. உயர்ந்தவன், தாழ்ந்தவனென்று இந்த உலகம் அகந்தையில் அலைந்துகொண்டிருக்கிறது. இந்நிலை மாறவேண்டுமெனின் யாவருக்கும் கல்வி அவசியமானது...

தொடரும்............

**வாழ்க தமிழ்.!
வாழ்க திருவள்ளுவம்.!!**

# வேற்றுமையில் ஒற்றுமை என்பது ஒவ்வொரு தனி மனிதரின் கொள்கையாக மாற வேண்டும்:

## மியூசிக் அகாடமி விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

“வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்துதான் இன்று நாட்டுக்குத் தேவையான கொள்கை. இந்தக் கொள்கையை அரசியல் கட்சிகள் மட்டும் வலியுறுத்துவதாக நீங்கள் சுருக்கி நினைத்துவிடக் கூடாது. கலை அமைப்புகளின் கொள்கையாக, ஒவ்வொரு தனிமனிதரின் கொள்கையாக மாற வேண்டும்“ என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.சென்னை, மியூசிக் அகாடமியின் 96 வது ஆண்டு மாநாடு மற்றும் இசை விழா தொடக்க நிகழ்ச்சி வியாழக்கிழமை (டிச.15) நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு முதல்வர் ஸ்டாலின் பேசியது: “இந்த மாபெரும் விழாவில் சங்கீத கலாநிதி விருது, சங்கீத கலா ஆச்சார்யா விருது, டி.டி.கே விருது, இசை அறிஞர் விருது, நிருத்ய கலாநிதி விருது பெற்றவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பில், தமிழ்நாட்டின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இசையுலகின் மிகப்பெரிய விருது மியூசிக் அகாடமி விருது என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அத்தகைய உயரிய விருது பெற்றுள்ள நீங்கள் அனைவரும் தொடர்ந்து இசைத்துறைக்கு தொண்டாற்றி உங்களைப் போன்ற திறமைசாலிகளை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.இயல், இசை, நாடகம் என்று முத்தமிழைப் பிரிப்பார்கள். இந்த முத்தமிழில் முதலில் பிறந்தது நாடகம்தான் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் சொல்வார். ஆதிமனிதனின் முதல் மொழி சைகையே. அதனால்தான் முதலில் பிறந்தது நாடகம். அவனது ஒலிக்குறிப்புகள் இசையை உருவாக்கியது. அதன் பிறகுதான் எழுதக் கற்றுக் கொண்டான். அந்த வகையில் நாடகம் இசை இயல் என்பதே சரியான வரிசை என்று முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னார்.

இத்தகைய இசைத்தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கும் முன்பிருந்தே நம்முடைய தமிழ் மரபில்



உள்ளது. எழுத்து ஒலிகளின் பிறப்பையே காற்றில் இருந்து எழும் இசையாகக் கருதும் அளவுக்கு தமிழர் இசை அறிவு இருந்தது. அந்த வகையில் தமிழர்களின் இசை மரபு என்பது பழமையானது! செழுமையானது! சிலப்பதிகாரம் என்ற தமிழ்க் காப்பியமே இசைக்காப்பியம்தான். சங்க காலம், காப்பிய காலம், பக்திக்காலம் முதல் இசையானது நமது தமிழ் மண்ணில் புதுப்புது பொலிவோடு சிறந்து விளங்கியது.தேவாரமும் திருவாசகமும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும்,பெரியபுராணமும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும்படித்தால் தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை முழுமையாக அறியலாம். ‘இசை என்பது காதுகளுக்குப் போர்த்தி விடுகின்ற கவுரவப் பொன்னாடை’ என்று கவிஞர் மு.மேத்தா குறிப்பிட்டார்.

அத்தகைய கவுரவப் பொன்னாடை போர்த்தும் அரங்கம்தான் இந்த மியூசிக் அகாடமி.பொதுவாக முதலமைச்சரிடம்தான் கோரிக்கை வைப்பார். ஆனால் நான் இங்கே உங்களுக்கு, இசைக் கலைஞர்களுக்கு கோரிக்கை வைப்பது காலத்தின் தேவை என்று நான் கருதுகிறேன். இன்றைய நாள் இந்து தமிழ் திசை நாளிதழில் பேட்டி அளித்திருக்கிறார் நம்முடைய மியூசிக் அகாடமியின் தலைவர் முரளி. நான் காலையில் படித்தேன். தனது கொள்கையை வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார். எங்களின் விழாக்களின் மூலமாக வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறோம் என்று முரளி சொல்லி இருக்கிறார். இந்தக் கருத்துதான் இன்று நாட்டுக்குத் தேவையான கொள்கை.இந்தக் கொள்கை ஏதோ அரசியல் கட்சிகள் மட்டும் அல்ல, அரசியல் கட்சிகள் மட்டும் வலியுறுத்துவதாக நீங்கள் சுருக்கி அதை நினைத்துவிடக் கூடாது. இதுபோன்ற கலை அமைப்புகளின் கொள்கையாக ஒவ்வொரு தனிமனிதரின் கொள்கையாக மாற வேண்டும்; எதிரொலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மியூசிக் அகாடமி போன்ற இசைக்கலை அமைப்புகளும், மன்றங்களும் தமிழிசைக்கு, தமிழ்ப்பாடல்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். தமிழ் இலக்கியத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன. அந்தப் பாடல்களும் இதுபோன்ற இசை மன்றங்களில் தவறாது ஒலிக்க வேண்டும்.பக்தி இசையாக இருந்தாலும், திரையிசையாக இருந்தாலும் மெல்லிசையாக இருந்தாலும், பாப் இசையாக இருந்தாலும், ராக் இசையாக இருந்தாலும் தமிழிசையாக இருக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள் என்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

மொழி இருந்தால்தான் கலை இருக்கும். இசை வளர்த்தல் என்பது கலை வளர்த்தல் மட்டுமல்ல தமிழ் வளர்த்தலும்தான் என்பதை மனதில் அனைத்துக் கலைஞர்களும், அனைத்து கலை அமைப்புகளும் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்த சிறப்பான இனிய நிகழ்ச்சியில் நான் ஆட்சிப் பொறுப்பேற்று எந்தவித பிரச்சினையில்லாமல், எந்தவித பரபரப்பும் இல்லாமல், ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், எந்த டென்ஷனும் இல்லாமல், ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், அது இந்த நிகழ்ச்சியாகத்தான் அமைந்திருக்கிறது” என்று அவர் பேசினார்.

# மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு விழா அழைப்பிதழ் தயார்: சிறந்த மாடுபிடி வீரர், காளைக்கு கார் பரிசு வழங்க திட்டம்



மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு விழாவுக்கான அழைப்பிதழை தயார் செய்து விழா கமிட்டி நிர்வாகிகள் போட்டிக்கான ஏற்பாடுகளை தொடங்கிவிட்டனர். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி ஜனவரி 15ம் தேதி மதுரை அவனியாபுரத்தில் நடக்கிறது. 16ம் தேதி பாலமேட்டிலும், 17ம் தேதி அலங்காநல்லூரிலும் போட்டிகள் நடைபெற உள்ளன.இதில் பங்கேற்பதற்காக காளைகளுக்கு அவற்றின் உரிமையாளர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர். மாடுபிடி வீரர்கள் தங்கள் பகுதியில் தற்காலிக வாடிவாசல் அமைத்து காளைகளை அடக்கி பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கு விசாரணை முடிந்த நிலையில், விரைவில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்க உள்ளது. தமிழக அரசு, ஜல்லிக்கட்டு நடத்த இருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகளை தொடங்கியிருப்பதாகவும் நீதிமன்றத்தில் கூறியிருக்கிறது.தமிழக அரசின் இந்த நம்பிக்கையான நடவடிக்கையும், நீதிமன்றம் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சார விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு தடை விதிக்காது என்ற எண்ணத்திலும், தென் மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு திருவிழாவுக்கான ஏற்பாடுகளை அதன் கமிட்டி நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.பாலமேடு, அலங்காநல்லூர் போட்டிகளில் சிறந்த மாடுபிடி வீரர், சிறந்த காளை உரிமையாளருக்கு கார், சிறப்பாக விளையாடும் மற்ற வீரர்கள், காளைகளுக்கு தங்கக் காசுகள், பைக்குகள், ஏசி, பிரிட்ஜ், வாஷிங்மெஷின் உள்ளிட்ட பல்வேறு விலை உயர்ந்த பரிசுப்பொருட்கள் வழங்கப்படும். அதற்கான நன்கொடைகளை தற்போதிருந்தே ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து பெற்றால்தான் போட்டி திட்டமிட்டபடி நடத்த முடியும்.

அதனால், பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை அந்த கிராம ஜல்லிக்கட்டு கமிட்டி நிர்வாகிகள் தற்போதே தொடங்கிவிட்டனர். அவர்கள் போட்டிக்கான அழைப்பிதழை தயார் செய்து, அதில், ஜன.16ம்தேதி ஜல்லிக்கட்டுப் போட்டி நடப்பதாகவும், அன்று பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி சார்பில் ஜல்லிக்கட்டு விழா மஞ்சமலை ஆற்றில் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.இதுகுறித்து கிராம கமிட்டி செயலாளர் ஆர்.கே.பிரபு கூறுகையில், ‘‘சிறந்த காளை, மாடு பிடி வீரருக்கு கார் பரிசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்படும். தற்போது அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ்களை விருந்தினர்கள், நன்கொடையாளர்களுக்கு வழங்கிவருகிறோம்’’ என்றார்.

# ராகுல்காந்தி மேற்கொண்டுள்ள இந்திய ஒற்றுமை பயணம் 100 நாள் நிறைவு: மாவட்டம்தோறும் கொண்டாட கே.எஸ்.அழகிரி வேண்டுகோள்

ராகுல்காந்தியின் இந்திய ஒற்றுமை நடைபயணம் இன்றுடன் 100 நாட்கள் நிறைவடைவதையொட்டி, மாவட்டம்தோறும் கொண்டாடு மாறு கட்சி நிர்வாகிகளுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:மக்களை ஒன்றுபடுத்துவதற் காக இந்திய ஒற்றுமை பயணத் தைக் கடந்த செப். 7ம் தேதி கன்னியாகுமரியில் ராகுல்காந்தி தொடங்கினார்.

இந்த நடைபயணம் 12 மாநிலங்களில் 3,500 கிமீ தூரத்தை 150 நாட்களில் கடந்து பிப்ரவரி முதல் வாரத்தில் ஜம்மு காஷ்மீரில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு நிறைவடைய இருக்கிறது.விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகள் தலைமையில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தில் மகாத்மா காந்தியுடன் ஜவஹர்லால் நேரு நடைபயணம் மேற்கொண்டார். அதேபோல, மகாத்மா காந்தியின் கொள்ளுப்பேரன் துஷார் காந்தி, பண்டித நேருவின் கொள்ளுப்பேரன் ராகுல்காந்தியோடு நடைபயணம் மேற்கொண்டது இந்திய தேசிய வரலாற்றை நினைவுபடுத்துவதாக இருந்தது.

ராகுல்காந்தியின் இந்திய ஒற்றுமை பயணத்தின் 100வது நாள் நிகழ்வு இன்று (டிச.16) ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.அதையொட்டி அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளை தமிழகத்திலுள்ள கட்சி அளவிலான அனைத்து மாவட்ட, வட்டார, நகர, பேரூர் காங்கிரஸ் அமைப்புகள் அனைத்தும் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.இந்த நிகழ்வுகளின் மூலம் ராகுல்காந்தியின் 100 நாள் இந்திய ஒற்றுமைப் பயணம் இந்திய அரசியலில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தையும், சிறப்பம்சங்களையும் மக்களிடையே பரப்ப வேண்டும்.

# ஈழம் அல்லது எல்லாம்: வன்முறையற்ற குழப்பத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டம்

- இரத்னஜீவன் எச். ஹூல்

ஈழம்: அனைத்தும், இப்போது சிறிது, பின்னர் மேலும்

1970 களின் முற்பகுதியில் ஒரு இளங்கலை மாணவனாக இருந்தபோது, தரப்படுத்தலுக்கு எதிரான மாணவர் இயக்கத்திலிருந்து ஈழத்துக்கான அழைப்பு வந்தது. அந்தச் சமயத்தில் ஒரு பொறியியல் பேராசிரியர் எங்களுக்கு இழைக்கப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கூக்குரலை ஈழத்துக்கான கூக்குரல் என்று கேலி செய்தார். அதாவது அனைத்தும், இப்போது சிறிது, பின்னர் மேலும் எனக் கேட்பது.

சிங்கள அரசின் சொந்தத் திட்டங்களின் பிரதிபலிப்பாக ஈழம் உள்ளது.

மாணவர்களின் ஈழப்போராட்டம் தொடங்கிய பின்னர் கடந்த 50 ஆண்டுகளில், உண்மையிலேயே அடர்த்தியான மனநிலையுள்ளவர்களைத் தவிர, மற்ற அனைவருக்கும் இந்த ஈழக் கேலிச்சித்திரத்தை உளவியலாளர்கள் முன்னிறுத்தல் **(projection)** என்று அழைக்கிறார்கள். மற்றவர்கள் என்ன செய்ய உத்தேசிக்கிறார்கள் அல்லது செய்கிறார்கள் என்பதைத் துல்லியமாக முன்னிறுத்துதல் ஆகும்.

சிங்கள அரசு ஈழத்தை அடைவதற்கான வாசலில் உள்ளது. சிங்கள மொழியும் பவுத்தமும் எங்களின் தொண்டைக்குள் திணிக்கப்பட்டு விட்டது. தெற்கு மட்டக்களப்பு தற்போது அம்பாறை என்று அழைக்கப்படுகிறது. அது தமிழர்களின் கைகளில் இருந்து பறிபோய்விட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் அம்பாறை 4,500 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. எஞ்சிய மட்டக்களப்பில் 2500 ஏக்கர் மட்டுமே உள்ளது எனத் தெரிவிக்கிறார். நீர்கொழும்பு மற்றும் புத்தளம் பறிபோய்விட்டது. திருகோணமலை கிட்டத்தட்டப் போய்விட்டது. 1827 மற்றும் 1921 க்கு இடையில் சிங்களவர்கள் (திருகோணமலையில்) குடித்தொகையில் 5**%** க்கும் குறைவாகவே இருந்தனர். ஆனால் இப்போது - 1921 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் - சிங்களவர்கள் 5**%** இல் இருந்து 26.9**%** ஆக உயர்ந்துள்ளனர். அதே சமயம் தமிழர்கள் 54.47**%** இல் இருந்து 32.29மூ வரை குறைந்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நீதிமன்ற மொழி என்று அரசியலமைப்புச் சட்டம் பறைசாற்றினாலும், தமிழ் நீதிபதி ஒருவர் இனவாத அரசிடம் இருந்து அனுகூலங்களைப் பெறுவதற்கு இப்போது சிங்கள மொழியில் மனுக்களைப் பெற்று, சிங்களத்தில் தமிழர்களுக்கு இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார் என திருகோணமலையில் பணியாற்றும் மூத்த வழக்கறிஞர் ஒருவர் கூறுகிறார். சிங்கள மொழியில் வழங்கப்படும் ஆவணங்களைப் பெற மறுத்தால் அந்த நீதிபதி அவர்களை நீதிமன்ற அவமதிப்புக்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக் கூடும். திருகோணமலைப் பண்பாடு இப்போது பெரும்பான்மை சிங்களவர்கவர்களது பண்பாடாக மாறியுள்ளது. தமிழ் அதிகாரிகள் தமிழ் ஊழியர்களிடம் சிங்களத்தில் பேசுகிறார்கள். எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும், உணவு கூடங்களிலும் (குழழன ஊவைல) கூட எச்சரிக்கையுடன் தமிழர்கள் முதலில் எங்களோடு சிங்களமொழியில்தான் பேசுகிறார்கள்.

வவுனியாவின் பெரும் பகுதி பறிபோய்விட்டது. வவுனியா பாதுகாப்புப் படைத் தளபதி தேர்தல் ஆணையத்திடம் சொல்லி தமிழ் அதிகாரிகளை இடமாற்றம் செய்துள்ளார். இதனால் தேர்தலில் முறைகேடுகள் நடக்கலாம். இன்று நான் அதிகாலை யாழ்ப்பாணத்தில் உள்ள தேவாலயத்தில் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியே வந்தபோது ஒரு பெரிய சுற்றுலாப் பேருந்து நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டேன். அது அனுமதிக்கப்படாத இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் சிங்களவர்கள் இருந்தார்கள். அவர்கள் சத்தமாகவும் முரட்டுத்தனமாகவும் தங்கள் பணபலத்தைப் பறைசாற்றுவதைக் கண்டேன். யாழ்ப்பாணமும் விரைவில் சிங்களத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.

அபகரிக்கப்பட்ட நிலங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்கள் மீது காவல்துறை தாக்குதல்.


மகாவலி திட்டத்தின் மூலம் அரச அதிகாரத்தின் மிக மோசமான அதிகாரத்தை (அரசு) பகட்டாக வெளிப்படுத்துகிறது. 1980 இல் முல்லைத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தமிழ்க் கிராமங்களை இராணுவம் சுற்றி வளைத்து வரிசைப் படுத்தியது, எஞ்சியவர்கள் ஓடிய போது பலரைச் சுட்டுக் கொன்றது.

மகாவலி (கங்கை) நீரால் நிரப்பப்பட்ட அவர்களது நிலங்கள் சிங்கள சமூகத்தின் கசடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணம் முழுவதிலும் 34,200 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பொதுமக்களுக்கு ஒரு இராணுவீரர் நிறுத்தப்பட்டுள்ளாதாக முன்னாள் (வட மாகாண) முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறுகிறார். இலங்கை இராணுவத்தின் 7 பிராந்திய தலைமையகங்களில் 5 வடக்கு மாகாணத்தில் உள்ளன என்று கலிபோர்னியாவின் **Oakland Institute** இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராத மிட்டல் கூறுகிறார். யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டும் 23,000 தமிழர்கள், யுத்தம் முடிந்து கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் கடந்த பின்னரும் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

மணல் ஆறிலிருந்து 14,000 குடும்பங்கள் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டன. சிங்களவர்களைக் குடியேற்ற 25,000 ஆயிரம் ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டு சிங்களப் பிரிவு செயலகம் உருவாக்கப்பட்டது. அது தற்போது வெலி ஓயா என அழைக்கப்படுகிறது. மணல் ஆறுதான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழர்களை இணைக்கும் மூலோபாய இணைப்பாக இருந்தது. அந்த இணைப்பு இப்போது முறிந்து விட்டது.

மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மையத்தின் இயக்குநரும் மூத்த வழக்கறிஞருமான கே.எஸ். இரத்னவேல் கூறுகையில், தலைமுறை, தலைமுறையாகத் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்துவரும் தமிழ் ஊர்மக்களின் நிலங்களை வனவிலங்கு மற்றும் வனத்துறை திணைக்களங்கள் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்தி அவை ஒதுக்கீட்டு நிலங்கள் எனக் கூறி அபகரிக்கப்பட்டு வருவதாகக் (இரத்னவேல்) கூறுகிறார். அரச அதிகாரிகள் அவர்களை வெளியேற்றுகிறார்கள். ஏழைகளான ஊர் மக்கள் வெறுமனே இணங்குகிறார்கள். ஏனெனில் எதிர்ப்புக் காட்டுவது பிணையில்லாமல் சிறையில் அடைக்க வழிவகுக்கும்! ஊர்மக்கள் திகிலில் உள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் வனத்துறை திணைக்களம் 32,110 ஏக்கர் நிலத்தை அபகரித்துள்ளது. வனவிலங்கு திணைக்களம் 23,515 ஏக்கர் நிலத்தை அபகரித்துள்ளது. தொல்பொருள் திணைக்களம் 202 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது.



முல்லைத்தீவில் உள்ள மொத்த நிலப்பரப்பு 621,917 ஏக்கர் ஆகும். இதில் 100,000 ஏக்கரை அரச திணைக்களங்களும் இராணுவமும் இணைந்து கைப்பற்றியுள்ளன.

அரசாங்க மற்றும் தனியார் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை-யின் **(UNHCR).** தலைவரான முன்னாள் நீதிபதி நவநீதம்பிள்ளை உறுதிப்படுத்துகிறார். தொல்பொருள் பாரம்பரியத்திற்கான ஜனாதிபதி செயலணி, அதன் மன்னிப்பு கேட்க மறுக்கும் சிங்கள பவுத்த சார்பு மற்றும் இராணுவமயமாக்கப்பட்ட தொனி மற்றும் பாதுகாப்பு செயலாளரின் தலைமையில் இருப்பது குறித்து அவர் மிகுந்த கவலையை வெளிப்படுத்துகிறார். தொல்லியல் மற்றும் வரலாற்றுப் பாதுகாப்பை அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குப் பயன்படுத்துவதற்கு முன்னரே இருக்கும் ஒரு மூலோபாயத்தின் புதிய வெளிப்பாடாக அவர் செயலணியை சித்தரிக்கிறார். தொல்பொருள் திணைக்களம், நிலங்களை அபகரிக்கும் பணியை அண்மைக்காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளதுடன் வடக்கு மற்றும் கிழக்கில் புத்த கோயில்களை அமைப்பதற்கான முயற்சிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. ஆராய்ச்சி மற்றும் பண்டைய இடங்களைப் பாதுகாப்பது என்ற போர்வையில் காணி அபகரிப்பு இடம்பெறுகிறது. இவை பெரும்பாலும் சைவ கோயில்களுக்கு அருகிலோ அல்லது அதற்கு அடுத்தோ அமைந்துள்ளதாக அனுரத்த மிட்டல் கூறுகிறார். குருந்தூர் கோவிலை அவர் எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். அங்கு அரசியல்வாதிகள் மற்றும் இராணுவம் பெரும் ஆரவாரத்துடன் புதிதாக ஒரு புத்த கோவிலைக் கட்டியுள்ளனர்.

புத்தகோயில் திறப்பு விழாவில் பங்கேற்றவர்கள் முகக்கவசம் அணிந்திருந்தனர், ஒருவேளை புதிதாக முன்மொழியப்பட்ட வெறுப்பு - பேச்சு சட்டங்கள் மற்றும் அவர்களின் செயல்களால் பவுத்த மதத்தை இழிவுபடுத்துவது தங்களைச் சிக்கலில் மாட்டக் கூடும் என்று பயந்திருக்கலாம். கன்னியா போன்ற இந்து மத வழிபாட்டுத் தலங்களை உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திய பவுத்த பிக்குகள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அனைத்து நெறிகளையும் மீறி வெட்கமின்றி சட்டத்திற்கு முரணாகச் செயற்படுவதாக சட்டத்தரணி இரத்னவேல் வெளிப்படையாகக் கூறியுள்ளார். நான் திருகோணமலைக்கு அருகில் உள்ள இடத்திற்குச் (கன்னியா) சென்றபோது, வெள்ளைநிற உட்பாவாடை மற்றும் இரவிக்கை அணிந்த ஒரு இளம் சிங்களப்பெண் பொது இடத்தில் தனது இரவிக்கையிலிருந்து வெளியேறும் மார்பகங்களுடன் வெந்நீர் நீருற்றுகளில் பொது இடங்களில் குளித்துக்கொண்டிருப்பதைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். வழிபாடு செய்பவர்களில் யாராவது ஈர்க்கப்படுவார்களா என்று பார்க்க விரும்பினேன், ஆனால் என் மனைவி என் கையைப் பிடித்து என்னை அழைத்துச் சென்றார். இவர்கள் பவுத்த மதத்திற்கு அவமானம்!



வறிய தமிழர்களுடன் போட்டியிடும் இராணுவம்

இலங்கையில் மிகவும் இராணுவ மயமாக்கப்பட்ட மாவட்டமான முல்லைத்தீவில் உள்ள அனைத்துப் பொதுமக்களையும் விட இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அதிகமான காணிகள் உள்ளன. முல்லைத்தீவை சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் 33 முகாம்களை வைத்துள்ளனர்.

வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் திரு.துரைராஜா இரவிகரனின் கருத்துப்படி, இராணுவத்தினர் விடுமுறை விடுதிகள், உணவகங்கள் நடத்துவது முதல் தனியார் காணிகளில் தோட்டம் செய்வது, கட்டிடக் கற்களை விற்பனை செய்தல், வணிக வளாகங்களை நடத்துதல், முடிதிருத்தும் தொழிலில் முடி வெட்டுதல், தயிர் மற்றும் வெண்தயிர் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்வது வரை அனைத்து வகையான வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

திரு. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிஹரன், விடுமுறை விடுதிகள் மற்றும் உணவகங்களை நடத்துவது முதல் தனியார் நிலங்களில் தோட்டங்கள் செய்வது வரை கட்டிடக் கற்களை விற்பனை செய்வது, வணிக வளாகங்களை நடத்துவது, சிகையலங்கார விடுதிகளில் சிகை அலங்காரங்களை வழங்குவது, குங்குமப்பூ மற்றும் தேன் விற்பனை செய்வது வரை இராணுவத்தில் அனைத்து வகையான வணிகங்களும் உள்ளன.

இராணுவத்தினரின் ஊதியம் பொதுப் பணத்திலிருந்து வரும்போது, இராணுவம் பயன்படுத்தப்படும் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களாக இருக்கும் போது, வறிய பொதுமக்கள் (இராணுவத்தோடு) போட்டியிட முடியாது. இந்த நியாயமற்ற போட்டி சூழலில், நிலம் வாங்கவும், தொழிலாளர்களை அமர்த்தவும் வேண்டிய நிலையில், தமிழ் மக்களுக்கு தங்களது வாழ்வாதாரத்தை விரிவுபடுத்த வழி இல்லை. அவர்களுக்கு இலவச உழைப்பு இல்லை. அவர்கள் மற்றவர்களின் நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் வறுமையில் மூழ்கியுள்ளனர்.

இந்துக் கோவில்கள் போன்ற பல தமிழர்களது பாரம்பரிய இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, பவுத்த கோவில்கள் இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் கட்டப்பட்டுள்ளன என்று இரவிகரன் மேலும் கூறுகிறார். குறிப்பாக நீதிமன்ற உத்தரவுகளைக்கூட மீறிய ஞானசார தேரரை அவர் குறிப்பிடுகிறார். சட்டத்தரணி இரத்னவேல் மற்றும் மற்றுமொரு சட்டத்தரணி காண்டீபன் தங்கராஜா ஆகியோர் இதனை உறுதிப்படுத்துகின்றனர்.

(மிகுதி அடுத்த கிழமை. ஆங்கில மூலம் **https://www.colombotelegraph.com/index.php/elam-or-elaam-a-case-for-promoting-nonviolent-chaos/.** *தமிழாக்கம் கனடா நக்கீரன்*)

# இவ்வார ராசிபலன்

**16-12-2022 வெள்ளி தொடக்கம் 22-12-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும். வம்புதும்புகள் ஒழியும். மெத்தனப் போக்கு விலகும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. இடமாற்றம் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. நற்செய்தி நாடி வரும். பொறாமை விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செய்தொழில் நன்மை தரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். வாகன யோகம் உண்டு. இனிய சம்பவம் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,4,8,3

அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். உடல் சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். உடல் உபாதைகள் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். போட்டிகள் உருவாகி மறையும். புத்திர வழியில் கவலை ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவு உண்டாகும். பயணம் தடைப்படும். உத்தியோக மாற்றம் உண்டு. மருத்துவச் செலவு உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. ஆடம்பர சுகங்கள் கூடும். உத்தியோக மாற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு பெருகும். வீண்வம்பு ஓடி மறையும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. கலையார்வம் கூடும். விவசாயம் கவனம் தேவை. வருமானவரி தொல்லை ஏற்பட்டு விலகும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,4,6,2

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**மிதுனம்:** புத்திரயோகம் கிடைக்கும் வாரம். மறைமுக எதிர்ப்புகள் விலகும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். தனவரவு உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. குடும்ப கௌரவம் உயரும். சச்சரவு அகலும். உத்தியோக உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். வாகன மாற்றம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். மன அமைதி கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழில் உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மனதெளிவு கிட்டும். சொத்துக்கள் சேர்க்கையுண்டு. வியாபாரம் லாபம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. நிர்வாக அலைச்சல் கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. வாய் பேச்சில் நிதானம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். வறுமை நிலை மாறும். பெருமைகள் கூடி வரும். திறமைகள் அதிகரிக்கும். திண்டாட்டங்கள் குறையும். கொடுக்கல் வாங்கலால் நன்மை உண்டு. ஆரோக்கிய அபிவிருத்தி அடையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,8,4,6

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**கடகம்:** பூமியால் லாபம் உண்டு. விவசாயம் கை கொடுக்கும் வாரம். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை காணப்படும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. எதிரிகள் தொல்லை உதிரியாகும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் வசூலாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். உறவால் பண விரயம் ஏற்படும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 3,5,9,8

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,W




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வீண்வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. புதிய முதலீடு லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். புதிய தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்திகள் வரும். வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடி தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகம் விலகும். சந்தோஷம் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும். சாதனைகள் ஓங்கும். காதலில் பிரிவு ஏற்படும். குடும்பம் மனநிறைவு தரும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிடைக்கும். போட்டிகள் மறையும். முயற்சிகள் பலன் தரும். கர்மவினைகள் அகலும். காரியம் கை கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,T



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகம் திருப்தி தரும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்ப நிர்வாகம் சீராகும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். கடன் வாங்க நேரிடும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். உஷ்ண நோய் ஏற்படும். உறவினர்களால் பாதகம் உண்டு. இழுபறி நிலை மாறும். மனவேதனை அதிகரிக்கும். சுபகாரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவுகள் பெருகும். அலைச்சல் அசதி ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தோரால் உதவி உண்டு. முக்கியமான எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். கால்நடைகளால் நன்மை உண்டு. வருமானம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,8,3

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். பயணத்தால் அனுகூலம் உண்டு. புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நில புலன் சேர்க்கையுண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றியுண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமையுண்டு. கனவு பலிதம் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. உறவினர்களால் நன்மையுண்டு. விருந்தினர் வருகையுண்டு. சொத்து சேர்க்கை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புண்டு. விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மையுண்டு. வெளியூர் பயணம் உண்டு. உத்தியோக வாய்ப்புண்டு. அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் நிதானம் தேவை. கலை ஈடுபாடு அதிகரிக்கும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகை தொல்லை தரும். பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வழக்கு வெற்றி தரும். விபரீத எண்ணம் விலகும். நவகிரஹ அனுகிரஹம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐங்கரன், அதிர்ஷ்ட எண்: 7,3,0,2

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். குழப்பங்கள் நீங்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். எதிர்பார்ப்புகள் உருவாகும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். திட்டங்கள் நிறைவேறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். மின்சாரத்தில் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குரு பகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,3,8

அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**தனுசு:** பிரபல்யம் உதயமாகக் கூடிய வாரம். பணவரவு உண்டு. பணிவு அவசியம். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமாகும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. எண்ணங்கள் ஏற்றம் தரும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளுஅதிகரிக்கும். புதிய முயற்சி பலன் அளிக்கும். குடும்ப சந்தோஷம் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேர்க்கும். மனைவி வழி உறவால் லாபம் உண்டு. திடீர் கடன் ஏற்பட்டு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராம பிரான், அதிர்ஷ்ட எண்: 4,8,6,2

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T

**மகரம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். சுபிட்ஷங்கள் பெருகும். வீண்




விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மையுண்டு. முடிவுகள் சாதகமாகும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு ஏற்படும். வீண் வம்பு விலகும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானம் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். கலைத்தொழில் திருப்பம் தரும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். பெருமைகள் பெருகும். திறமைகள் அதிகமாகும். ஐஸ்வர்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 2,4,3,8

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,S

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1027



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

"கணநாதர் போற்றும் கடவுளே வருக
ஓம்ஆம் எனுமுயர் பராபரனே
ஆம்ஓம் எனும் ஆதியே வருக
ஐந்து கடவுளா ஐந்தொழில் நடாத்தும்
எந்தையே தந்தியிலிவர்ந்து நீ வருக
வஞ்சனை சூனியம் மாறிடவருக
பவமறுத் தருட்கண் பார்த்திட வருக வருகவே"

இவற்றோடு தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைக்கஞ்சி, சித்திரபுத்திரநாயனார் பூசை, நாகதம்பிரான் பொங்கல், ஆவணி விநாயகசதுர்த்தி, கார்த்திகைவிளக்கீடு, முதலிய காலங்களிலும் சிறப்பான பூசைகள் நிகழ்வதோடு, விசேட அபிஷேகங்களும், திருவிழாவும் நடைபெறும். ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவங்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். ஆனிப்பரணியிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம், உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். மதியநேரத்திலும், மாலையிலும் திருவிழாக்கள் நடைபெறும். இவற்றில் ஆரம்பத்தில் நடைபெறும் சில திருவிழாக்கள், ஆலயபரிபாலன சபையால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கோயில் திருவிழாக்கள் என அழைப்பர். இந்நாட்களிலே சுவாமி எழுந்தருளி உள்வீதி வலம்வருவர். ஐந்தாம்நாள் நடைபெறும் திருவிழாவைக் குருக்கள் திருவிழா என அழைப்பர். இந்நாளிலிருந்து சுவாமி எழுந்தருளி உள்வீதியும், வெளிவீதியும் வலம்வருவது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆரையம்பதி பரமநாயினார் ஆலயத்தில் விசேடநாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் எழுந்தருள வாகனங்கள் பல காணப்படுகின்றன. குதிரை வாகனம், இடப வாகனம், யானை வாகனம், மயில் வாகனம், என்பன குறிப்பிடத்தக்கவையாகும். திருவிழாக்காலங்களிலே வெளிவீதி வலம்வரும்பொழுது விநாயகப்பெருமான் குதிரை வாகனத்திலும், சந்திரசேகரர் இடப வாகனத்திலும், பரமநயினார், பூரணை, புட்கலை சமேதராக யானை வாகனத்திலும், வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் மயில்வாகனத்திலும் எழுந்தருளி வலம்வருவர். இவ்வாகனங்கள் மலர்த்தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும். அயற்கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள், இத்திருவிழாநாட்களில் இவ்வாலயத்திற்கு வந்து சாம்பவதீட்சை பெற்றுச்செல்வர்.

இவ்வாலயத்தின் திருவிழாக்காலம், மக்களுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற காலமாக அமையும். தீர்த்தோற்சவதினத்தன்று அதிகாலையிலேயே திருப்பொற்சுண்ணம் இடித்துக்கொண்டு, பல நூற்றுக்கணக்கான அடியார்கள் சூழ்ந்துவரக் கோயிலிலிருந்து புறப்பட்டு, சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளிச் செல்வார். கடற்கரையை அடைந்ததும் அங்கு அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்தபின், சுவாமியை ஆலயத்திற்கு அழைத்து வருவர். வழிநெடுகிலும் தோரணங்கள் தூக்கி, மகரகும்பம் வைத்து சுவாமியை வரவேற்று மக்கள் சிறப்புச் செய்வர். சுவாமி கோயிலை வந்தடைந்ததும் யாகசாலை பிரிக்குங் கிரியைகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றிரவு திருப்பொன்னூஞ்சல் நடைபெற்று, கொடியிறக்கம் நிகழும். பிராயச்சித்த அபிஷேகம், வைரவர்பூசை என்பவற்றுடன் அடுத்தநாள் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பலவகைத் தத்துவநுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவையாக விளங்குகின்றன. அத்தோடு மக்கள் உடலும் உள்ளமும் தூயவராகி மகிழ்வுடன் வாழவும் விழாக்களும் விரதங்களும் உதவுகின்றன.

ஐயனாரின் தோற்றம் பற்றிப் புராணக் கதைகள் பலவாகக் காணப்பட்டபோதிலும், சிவவைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக, ஐயனார் வரலாறு விளங்குகின்றது. அரிகரனார் ஐக்கியம், சாதாரண நிலையில் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலையாகக் காணப்பட்டபோதிலும், அருவ உருவமாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரனார் ஐக்கியத்தின்மூலம் பிறந்த குழந்தையே, ஐயனார் என்பது ஞானிகள் கூற்றாகக் காணப்படுகின்றது. சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

"சிந்து வாரணம் வாழி சேவல் வாழி
திறன் மகாகாளர் முதற் சேனை வாழி
சந்ரநுதற் பூரணைபுட்கலையும் வாழி
சதுர்வேத ஆச்சிரம தருமம் வாழி
மந்திர வேதியர் வாழி மகங்கள் வாழி
வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி
எந்தையரி ஹரகுமர னடியார் வாழி
எழில்பொழிபதியென்றும் வாழி வாழி."

*வளரும்...*



## இவ்வார ராசிபலன்

(24 பக்கம் தொடர்ச்சி)




**கும்பம்:** மனநிறைவு கிடைக்கும் பக்குவமான வாரம். பூர்வீக சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் குறையும். பற்றாக்குறை நீங்கும். பணவரவு உண்டு. நிதி நிலைமை சீராகும். தனவரவில் மேன்மை தரும். நினைவாற்றல் பெருகும். கலை ஆர்வம் கூடும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். தாய் வழி உறவால் நன்மை உண்டு. பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். வெளியூர் பயணம் ஏற்படும். நல்லோர்கள் நட்பு கிட்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,2,4,5
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**மீனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கக்கூடிய வாரம். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக மாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திர வழியில் கவலைகள் ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல் உபாதைகள் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. தாய், தந்தை உதவியுண்டு. வெற்றிகள் குவியும். போதிய வரவு பெருகும். குடும்பத்தின் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். உத்தியோக உயர்வு உண்டு. ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. கால்நடைகளால் லாபம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் கூடும். மறைமுக தொல்லை நீங்கும். புண்ணியம் சேரும். தீர்த்த யாத்திரை உண்டு. காரியத்தடை அகலும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பழைய நட்பால் பண விரயம் உண்டு. வியாபாரம் திருப்தி தரும். விவசாயம் விளைச்சல் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,4,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C

# இந்தியாவிலேயே விலை உயர்ந்த காரை வாங்கிய தொழிலதிபர்



இந்தியாவிலேயே விலை உயர்ந்த ஸ்போர்ட்ஸ் கார்களின் வரிசையில் முன்னணியில் இருக்கும் மெக்லாரன் காரை, ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர் வாங்கியுள்ளார்.

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதைச் சேர்ந்த நசீர் கான் என்ற தொழிலதிபர் மெக்லாரன் நிறுவனத்தின் 765 எல்.டி ஸ்பைடர் என்ற ஸ்போர்ட்ஸ் காரை வாங்கியுள்ளார். இந்த காரின் மதிப்பு 12 கோடி ரூபாய் ஆகும். இந்தியாவில் இந்த காரை வாங்கிய முதல் நபர் இவரே.

இது மட்டுமின்றி, ரோல்ஸ் ரோய்ஸ், மெர்ஸிடஸ் பென்ஸ், ∴பெராரி, ∴போர்ட் மஸ்டாங் உள்ளிட்ட பல விலை உயர்ந்த கார்களை இவர் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# RUSH HOUR - 4ம் பாகம்: ஜாக்கிசான் அறிப்பு



ஜாக்கிசான் படங்களில் ஆக்ஷன், காமெடி கலந்து அதிரடி காட்டிய படம் ரஷ் ஹவர். 1998ம் ஆண்டு வெளியான இந்த படம் பெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து 2 பாகங்கள் வெளிவந்தன. வயது மூப்பின் காரணமாக இனி ஆக்ஷன் படங்களில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்த ஜாக்கிசான் வயதுக்கேற்ற வேடங்களை ஏற்று நடிக்க ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் சினிமாவை விட்டு விலகுவதாகவும் அறிவித்தார். இந்த நிலையில் ரஷ் ஹவர் படத்தின் 4வது பாகம் வெளிவர இருப்பதாக அறிவித்திருக்கிறார். இதற்கான ஸ்கிரிப்ட் தயாராகி வருவதாக கூறியிருக்கிறார் ஜாக்கிசான். சவுதி அரேபியாவில் நடக்கும் ரெட் சீ சர்வதேச திரைப் பட விழாவில் கலந்து கொண்ட ஜாக்கிசான், இதனை தெரிவித்திருக்கிறார். 4ம் பாகம் என்பதை குறிக்கும் வகையில் அவர் 4 விரல்களை காட்டியிருக்கிறார். அவருடன் ரஷ் ஹவர் படத்தில் நடித்து வரும் கிரிஷ் தக்கரும் இணைந்து இதனை அறிவித்திருக்கிறார். இதனால் ஜாக்கிசான் ரசிகர்கள் உற்சாகம் அடைந்திருக்கிறார்கள்.

# நோயின்றி வாழ்வோம்

## (நேரிசை ஆசிரியப்பா)

-------------------------------

சீராக யோகா தினமும் செய்து
வேரான நோயை விரைவில் அழிப்பீர்
சத்தான உணவைச் சமைத்து உண்டே
சொத்தான உடலைச் சுகமாக்கி வைப்போம்
எண்ணை ஊனுக்கு ஏக்கம் தவிர்த்து
வண்ணச் சிற்றுண்டியும் வாயில் வையோம்
பலவித நோய்வந்து பாழாக்கும் எம்முடலை
இலவச உணவையும் இயன்றவரை மறுப்போம்
வேக உணவு விரும்பலை மறுத்து
வாகடம் சொல்லும் வருத்தம் அறுப்போம்.
அமுதமே ஆனாலும் அளவோடு அருந்தி
சுமூக வாழ்வைச் சுவைத்து இரசிப்போம்
சோம பானம் சிதைக்கும் உடலை
சேம வாழ்வுக்குத் தவிர்ப்போம் புகைத்தல்
மூளைக்குத் தினமும் முறையான பயிற்சி
நாளைக்கும் ஞாபகம் நன்றாக இருக்கும்.
தியானத்தைத் தினமும் திடமாய்ச் செய்தே
மயாணம் போவதை மாற்றி அமைப்போம்
மூத்தோர் சங்கத்தில் மகிழ்வுடன் மேவி
சாத்திரம் பலதையும் சரியாய்க் கற்போம்
எண்ணத்தில் இறைவனை ஏற்றி
கண்ணாக நம்முடலைக் கருத்தோடு காப்போமே!

-------------------------------

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 301
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

எட்டுக்கால் பூச்சிக்கு
எட்டுக்கால் ஏனென்று
எட்டுக்கால் பூச்சியிடம்
கேட்கத்தான் ஆசை கொண்டேன்!
வெட்டுமின்னற் கொடிதன்னை
ஒட்டிநின்று செல்லமாக
சுட்டுவிரல் கொண்டேநான்
தொட்டுவிட ஆசை கொண்டேன்!

தேன்பூக்கள் வாய்மலர
தித்திக்கும் மெல்லிதழை
தீந்தமிழின் இதழாலே
தீண்டிவிட ஆசை கொண்டேன்!
வான்புகழாய் வெண்மதியாய்
விண்மீனாய் வளர்கதிராய்
உயிர்த்தமிழால் வாழ்வாங்கு
வாழ்ந்துவிட ஆசை கொண்டேன்!



# MORTGAGE FINANCIAL

Home / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

MERRY CHRISTMAS

HAPPY New Year 2023

"எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம் !"

SUBRA MORTGAGE SOLUTIONS

**Residential Mortgages**
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit

**Commercial Mortgages**
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit

## NESAN

**416-908-5656**

Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@subra.com
www.subra.com



**Our off:** 1585 Markham Rd, Unit # 406, Toronto, M1B 2W1, Canada

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS

Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL FINANCIAL LP | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG mortgages | MCAP








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1393 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 16, 2022

# Canadian Tamil Chamber of Commerce hosts its 'Christmas Mixer – 2022

**Canadian Tamil Chamber of Commerce , which was established 30 years back, , hosted its 'Christmas Mixer - 2022 on 14th December 2022 – at Whiteshield Banquet Hall located at 2300 Lawrence Ave E, Scarborough.**
**This event was hosted to celebrate the end of the year 2022 and the Christmas Mixer with fun, festive dancing and dinner!**
**Many Members, Board of Directors Friends and Representatives from Media Outlets were gathered there to grace the event.**




# SANTA ARRIVES AT 'MAJESTIC CITY INDOOR SHOPPING CENTRE AND THE ENTIRE TEAM OF BUSINESS OWNERS GATHERED THERE TO GRACE IT



# THE GUARDIAN HOME REALTY INC Brokerage Inc in Scarborough hosted its Annual Christmas Celebrations




ஸ்காபுறோவில் வெற்றிகரமாக இயங்கிவரும்வுர்நு **GUARDIAN HOME REALTY INC Brokerage Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனம் தனது வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழாவை கடந்த சனிக்கிழமையன்று **Scarborough Grand Cinnamon Convention Centre** மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.
நிறுவனத்தின் நிர்வாகப் பங்காளர்களான **Mr Sutharsan Nadarajah and Gini Annarasa -Sutharsan** ஆகியோர் மேற்படி விழா சிறப்பாக நடைபெற இணைந்து செயற்பட்டிருந்தனர். நண்பர்கள் வீடு விற்பனை முகவர்கள் சட்டவல்லுனர்கள் நண்பர்கள் ஊடக நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு கலந்து சிறப்பித்தனர்.
கௌரவிக்கப்பெற்றார். -செய்தியும் படங்களும்: சத்தியன்

# ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்ற 'மனசாளும் கண்ணகி' இசைத்தட்டு வெளியீட்டு விழா




யாழ்ப்பாணம் புங்குடுதீவில் எழுந்தருளியுள்ள கண்ணகை அம்மனின் புகழ்பாடும் பக்தி மனம் கமழும் பாடல் வரிகளைக் கொண்ட ஸ்காபுறோவில் 'மனசாளும் கண்ணகி' இசைத்தட்டு வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று எஸ்டேட் பேங்குவற் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
புங்குதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமான கவிஞர் கதிர் வசந்தரூபன் அவர்களின் பாடல்வரிகளுக்கு இனிதான இசையை வழங்கியவர் இசைப்பிரியன் ஆவார். இந்த விழாவை திரு சோம சச்சதிதானந்தன் தொகுத்து வழங்கினார். மண்டபம் நிறைந்த விழாவாக நடைபெற்ற இதில் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் பாஸ்டர் எஸ் ஜெயானந்தசோதி ஆகியோர் உட்பட பலர் அங்கு வாழ்த்துரை வழங்கினர்.
இசைத் தட்டின் பிரதிகளை நூற்றுக்கணக்கானவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பெற்று மகிழ்ந்தனர். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்- சத்தியன்

# RE/MAX ACE Realty Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் விற்பனை விருதுகள் வழங்கும் விழா சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது




(முன்பக்கத் தொடர்ச்சி)
நூற்றுக்கணக்கான விற்பனைப் பிரதிகள் தங்கள் விற்பனையின் அளவிற்கு சேவையின் தரத்திற்கும் ஏற்ப பல்வேறு வகையான விருதுகள் வழங்கிக கௌரவிக்கப்பெற்றனர்.
இவ்வருடத்தின் அதி உயர் விற்பனை முகவராக பங்காளி சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் **MONIS ISLAM** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று அதற்குரிய விருதுகளைப் பெற்றார்.
அங்கு அழைக்கப்பெற்றிருந்த ஊடக நண்பர்கள் சிலருடன் உதயன் பிரதம ஆசிரியர் அவர்களும் மேடை பூங்கொத்து வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.
*-செய்தியும் படங்களும்: சத்தியன்*





